


31 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 31 | பாலம்: 03 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 01, 2021

# அமெரிக்கப் புதிய அதிபரின் தொலைபேசி அழைப்பு!

அமெரிக்க அதிபராக 2021 ஜனவரி 20இல் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்ற ஜோ பைடன் ( Joe Biden) வெளிநாட்டுத் தலைவர்களுடனான தனது முதலாவது தொலைபேசி உரையாடலை கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவுடன் ஜனவரி 22இல் மேற்கொண்டார். இவ் உரையாடல் 30 நிமிடமளவில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் மெக்சிகோ அதிபர் Andrés Manuel López Obrador உடன் தொலைபேசியில் கலந்துரையாடினார்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தான் அதிபராகப் பதவியேற்ற முதல் நாளிலேயே 17 நிர்வாக ஆணைகளில் கையெழுத்திட்டார். இதுவே அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற ஒருவர் முதல் நாளிலேயே கையெழுத்திட்ட அதிகூடிய நிர்வாக ஆணைகளாகும். இதற்கு முன்னர் முன்னாள் அதிபர் Donald Trump எட்டு நிர்வாக ஆணைகளிலும் Barack Obama ஒன்பது நிர்வாக ஆணைகளிலும் முதல்நாளில் கையெழுத்திட்டிருந்தனர்.

அமெரிக்க அதிபர் பதவியேற்ற முதல் நாளில் கையெழுத்திட்ட நிர்வாக ஆணைகளில் குறிப்பிடத்தக்கவை:

1. காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் முகமாகப் பாரிஸில் மேற்கொண்ட உடன்படிக்கையில் (The Paris Agreement) மீண்டும் அமெரிக்காவைச் சேர்த்துக் கொண்டது.

2. அமெரிக்காவுக்கும் மெக்சிக்கோவிற்கும் இடையேயான எல்லையில் அவசர கால நிதியைப் பாவித்து சுவர் அமைப்பதை நிறுத்துதல்.

3. ஏழு இஸ்லாமிய நாடுகளின் கடவுச் சீட்டு வைத்திருப்போருக்கு அமெரிக்கா வருவதற்கான தடையை நீக்குதல்.

4. உலக சுகாதார அமைப்பில் (WHO) இருந்து அமெரிக்கா விலகுவது என எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்தல்.

5. அமெரிக்க மக்கள் 100 நாட்களுக்கு முகக்கவசம் அணிய வலியுறுத்துவதுடன் அமெரிக்க மத்திய அரசிற்குச் சொந்தமான இடங்கள் மற்றும் அலுவலகங்களில் கட்டாயமாக முகக்கவசம் அணியுமாறு பணித்தல்.

6. கனடாவிலுள்ள அல்பேட்டா மாகாணத்திலிருந்து அமெரிக்காவிலுள்ள Texas மாநிலத்துக்கு எண்ணைக் குழாய்கள் அமைக்கும் திட்டமான Keystone XL எண்ணைக் குழாய்த் திட்டத்தை இரத்து செய்தல்.


President Joe Biden signs his first executive orders on Jan. 20, 2021

இதைத் தொடர்ந்து புதிய அதிபர் பதவியேற்ற முதல் மூன்று நாட்களில் மொத்தமாக 30 நிர்வாக ஆணைகளில் கையெழுத்திட்டிருந்தார்.

அமெரிக்க அதிபர் Keystone XL எண்ணைக் குழாய்த் திட்டத்தை இரத்து செய்த பின்னர் கனடியப் பிரதமர், கனடிய மாகாண மற்றும் பிரதேசங்களின் முதல்வர்களுடன் நடத்திய கலந்துரையாடலில் மாகாண முதல்வர்கள் பலர் அமெரிக்க அதிபர் நட்பு நாடான கனடாவுடன் ஆலோசிக்காமல் ஏற்கனவே கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டத்தை இரத்து செய்து ஓர் ஆபத்தான முன்மாதிரியை நடைமுறைப் படுத்தியுள்ளார். கனடியப் பிரதமர் அதற்கு எதிராகத் தனது அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்றனர்.

அல்பேட்டா முதல்வர் Jason Kenney, ஒன்ராறியோ முதல்வர் Doug Ford, சாஸ்கச்சுவான் முதல்வர் Scott Moe, மற்றும் குவிபெக் மாகாண முதல்வர் François Legault ஆகியோர் Keystone XL எண்ணைக் குழாய்த் திட்டம் தொடர கனடியப் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

கனடியப் பிரதமர் அமெரிக்க அதிபருடன் உரையாட முன்னர் அவருக்கு மாகாண முதல்வர்கள் அனுப்பிய கடிதத்தில் அல்பேட்டா முதல்வர் Jason Kenney எண்ணைக் குழாய்களை அமைக்கும் நிறுவனத்திற்கு ஏற்பட்ட பல பில்லியன் டொலர் நஷ்டஈட்டை வழங்குவதற்காக கனடிய அரசு அமெரிக்க அரசிற்கு எதிராகப் பல தடைகளை அமல் செய்ய வேண்டும் எனக் கேட்டிருந்தார்.

அக்கடிதத்தில் மேலும் "ஏற்கனவே அமெரிக்க அதிபரின் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு திட்டத்தை தங்களது நீண்ட கால நட்பு நாட்டுடன் விவாதிக்க நேரம் ஒதுக்காமல் ஒருதலைப்பட்சமாகத் திரும்பப் பெறுவதன் மூலம் அமெரிக்கா, எந்த எதிர்காலத் திட்டங்களுக்கும், நமது இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கும் ஆழ்ந்த குழப்பமான முன்னுதாரணத்தை அமைத்துள்ளது. இது ஒரு தேர்தல் பிரசார வாக்குறுதி என்பதால் ஒரு தவறான செயல் சரியாகிவிடாது. வெளிநாட்டு அரசு ஒன்று தனது தேர்தலில் பிரச்சாரம் செய்ததற்காக எமது நாட்டுப் பொருளாதார நலத்திட்டங்களை நாம் கைவிட்டுச் சரணாகதி அடையத் தேவையில்லை" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாஸ்கச்சுவான் முதல்வர் Scott Moe ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் "இத்திட்டம் ஒரு முக்கிய உட்கட்டமைப்புத் திட்டம். கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது முன்பு வழங்கிய அனுமதியைத் திருப்பி இரத்துச் செய்வது தவறு. இது பாரதூரமான தாக்கங்களை முதலீட்டில் ஏற்படுத்தும். இத்திட்டத்தை இரத்துச் செய்வது வட அமெரிக்க எரிசக்திப் பாதுகாப்பு நிலைமைக்கு ஆபத்தை விளைவிக்கும். இதனால் இரண்டு நாட்டிலும் பல ஆயிரக் கணக்கானோர் வேலையை இழக்க நேரிடும். அத்துடன் எரிசக்தித்

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)


























# பிரயாக்ராஜ் திரிவேணி சங்கமம் – அலகாபாத்



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

டெல்லியில் இருந்து 700 கிமீ தொலைவில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் பிரயாக்ராஜ் (பழைய பெயர் அலகாபாத்) அமைந்துள் ளது. இந்த நகரம் உலகின் பழமையான நகரங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. மகாபாரத காவிய காலத்தில் இந்த நகரம் கௌசாம்பி என்று அழைக்கப்பட்டது. பின்னர், 1583ஆம் ஆண்டு முகலாயப் பேரரசர் அக்பரால் இந்த நகருக்கு அலகாபாத் என்ற பெயர் சூட்டப்பட்டது. 2018ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத் தால் அதிகாரபூர்வமாக பிரயாக்ராஜ் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இங்கு, இந்துக்களின் மூன்று புனித நதிகளான கங்கை, யமுனை மற்றும் கண்ணுக்குப் புலப்படாத சரஸ்வதி நதிகள் ஒன்றாகக் கூடுகின்றன. இந்த நதிகள் ஒன்றுடன் ஒன்று கலப்பதை நாம் மிகவும் தெளிவாக காணலாம். அதாவது கங்கை நதி தெளிவான இளமஞ்சள் நிறத்திலும் மற்றும் யமுனை நதி பச்சை நிறத்திலும் காணப்படும். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்கு நிகழ்த்தப்படும் மஹா கும்பமேளா என்னும் திருவிழா மிகவும் விசேஷமானதாகும். இந்தியாவின் பிரதமர் கள் ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி, லால் பகதூர் சாஷ்த்திரி, சந்திரசேகர், விஸ்வநாத் பிரதாப் சிங் மற்றும் ராஜீவ் காந்தி இந்த நகரில் பிறந்தவர்கள். இந்த நகரம் பிரட்டிஷ் ஆட்சிக்கு எதிரான இந்திய சுதந்திர இயக்கத்தின் மையமாக திகழ்ந்துள்ளது. மேலும் இந்தியாவின் விடுதலைக்காக மகாத்மா காந்தி தனது அகிம்சை எதிர்ப்பு திட்டத்தை முன் மொழிந்ததும் இந்த நகரத்தில் உள்ள ஆனந்த் பவனில் இருந்துதான்.






இராமாயண மற்றும் மகாபாரதக் காலத்திலுருந்தே இந்த நதிகளின் கூடல் புண்ணிய இடமாகப் போற்றப்பட்டு வருகின்றது. ராமர், லட்சுமணர் மற்றும் சீதாவும் இங்கு வந்து தங்கி வழிபட்டுச் சென்ற இடமாக இராமாயணம் குறிப்பிடுகி றது. பஞ்ச பாண்டவர்கள் மகாபாரதப் போரில் கௌரவர்களைக் கொன்ற பாவத்தில் இருந்து விடுபடுவதற்கு இங்கு வந்து நீராடி தங்கள் பாவங்களை போக்கிக் கொண்டதாகப் புராணங்கள் சொல்கின்றது. மூன்று புனித நதிகள் சந்திக்கும் புனிதமான திரிவேணி சங்கமத்தில் நீராடுவதன் மூலம் நாம் அறிந்தோ அறியாமலோ செய்த அனைத்துப் பாவங்களில் இருந்து விடுபடலாம் என்பது நம்பிக்கை. யமுனை நதிக்கரையிலிருந்து சிறிய வகை படகில் சென்று கங்கையும் மற்றும் யமுனை நதிகள் கூடும்மிடத்தில் நீராடவேண்டும். இங்குள்ள புரோகிதர்கள் உதவியுடன் முன்னோர்களுக்குத் தர்ப்பணம் செய்து வழிபடுவதற்குச் சிறந்த இடமாகவும் நம்பப்படுகின்றது.

காசி யாத்திரையை மேற்கொள்ளும் பக்தர்கள் ராமேஸ்வரம் சென்று வந்த 45 நாட்களில் காசி விஸ்வநாதரை தரிசிக்க வரும்போது பிரயாக்ராஜ் வந்து புனித நீராடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இங்கு கங்கை நதி யமுனையுடன் இணைவதற்கு முன்பு எடுக்கப்படும் கங்கா தீர்த்தம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். காரணம் இந்தத் தீர்த்தம் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் கெடுவதில்லை.

திரிவேணி சங்கமத்துக்கு அருகில் யமுனை நதிக் கரையில் 1583ஆம் ஆண்டு அக்பரால் கட்டப்பட்ட பிமாண்டமான அலகாபாத் கோட்டை உள்ளது. இந்தக் கோட்டையின் உள்ளே அழிவில்லாத அட்சயவட ஆல மரம் உள்ளது. இந்த ஆலமரத்தை தரிசனம் செய்வதை மிகவும் புனிதமானதாக் கருதப்படுகிறது.

பிரயாக்ராஜில் உள்ள ஆலயங்களை தரிசிப்பதற்கு ஒரு நாள் போதுமானது. அதனைப் பற்றிய தொகுப்பினை அடுத்த இதழில் காணாலாம்.

முடிவு தெரியாத நம் வாழ்வில் நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் நம் வாழ்க்கையை மாற்றிக்கொண்டே இருக்கும்.



# அமெரிக்கப்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

திட்டங்களில் முதலிடுவோரையும் பயமுறுத்தும்" என்று கூறினார்.

அமெரிக்க அதிபருடன் பேச முன்னர் கனடியப் பிரதமர் அமெரிக்க அதிபர் தனது முதலாவது செய்கைகளில் ஒன்றாக Keystone XL எண்ணைக் குழாய்த் திட்டத்தின் அனுமதியை இரத்துச் செய்தது பலத்த ஏமாற்றத்தைத் தருகிறது என ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

கனடியப் பிரதமருக்கும் அமெரிக்க அதிபருக்குமான தொலைபேசி உரையாடலில் கனடியப் பிரதமர் இது தொடர்பான தனது ஏமாற்றத்தைத் தெரிவித்தார். இதற்கு ஜோ பைடன் இந்த உத்தரவைப் பிறப்பித்ததன் மூலம் எண்ணைக் குழாய்கள் அமைப்பதை நிறுத்துவேன் என்ற எனது தேர்தல் பிரசார உறுதிமொழியை நிறைவேற்றினேன் என்றார். அத்துடன் இந்த முடிவால் கனடிய அரசுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையைத் தாம் அறிவதாகவும் கூறினார்.

இந்த உரையாடலின் போது அமெரிக்க அதிபரின் "அமெரிக்க உற்பத்திகளை வாங்குவோம்" என்ற கொள்கையைப் பற்றியும் ஜஸ்ரின் ரூடோ தனது கரிசனையைத் தெரிவித்தார். இது தொடர்பாகக் கனடாவின் கரிசனையை விரிவாகக் கேட்பதற்கு ஜோ பைடன் உறுதியளித்தார். அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையேயான விடயங்களைப் பகிரவும், இரு நாடுகளுக்கும் இடையேயான ஆழமான நீடித்த நட்பைத் தொடரவும் அடுத்தமாதம் சந்திப்பதற்கு இரு தலைவர்களும் ஒத்துக் கொண்டுள்ளனர்.



இரண்டு தலைவர்களினதும் தொலைபேசி உரையாடல் தொடர்பாகக் கனடிய அரசு விடுத்த அறிவித்தலில் "கனடியப் பிரதமரும் அமெரிக்க அதிபரும் தங்களது முதலாவது முக்கிய விடயம் கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருவது எனத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக இரு நாடுகளும் மருத்துவத் தகவல்களைப் பறிமாற்றம் செய்வதற்கும் கோவிட்-19 இன் திரிபடைந்த வைரஸ் தொடர்பாக ஆய்வுகளைத் தொடர ஒத்துழைப்பதற்கும் உறுதி செய்தனர்.

இருவரும் காலநிலை மாற்றம் தொடர்பாக எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் பற்றியும் உரையாடினர். பாரிஸ் ஒப்பந்தத்தில் உள்ள தங்கள் உறுதிப் பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினர். இருவரும் பசுமை வாயுக்களின் வெளியீடு நிகர-பூச்சிய (net- zero) நிலைக்கு அடைந்து சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காத நிலை ஏற்பட முயற்சிப்பது, பூச்சிய உமிழ்வு வாகனங்கள் உற்பத்தி மற்றும் எல்லை தாண்டிய தூய்மையான மின்சாரப் பரிமாற்றம் பற்றியும் உரையாடினார். Keystone XL எண்ணைக் குழாய்த் திட்டத்தின் அனுமதியை இரத்துச் செய்த அமெரிக்காவின் முடிவால் ஏற்பட்ட ஏமாற்றத்தையும் கனடியப் பிரதமர் தெரிவித்தார். இரண்டு நாடுகளுக்கும் இடையேயான எரிசக்தி விநியோகத்தில் உள்ள பொருளாதார மற்றும் எரிசக்திப் பாதுகாப்பு நன்மைகளையும், எரிசக்தித் தொழிலாளர்களுக்குக் கனடிய அரசு அளித்த ஆதரவையும் கனடியப் பிரதமர் அமெரிக்க அதிபருக்கு விளக்கினார்.

இரு தலைவர்களும் அரசின் நடவடிக்கைகளில் பன்முகத்தன்மையைப் பேணுவது பற்றியும் பழங்குடி மக்களுடன் இணைந்து செயற்படுவது பற்றியும் உறுதி பூண்டனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோ பைடனின் அமெரிக்க அரசிற்கும், ஜஸ்ரின் ரூடோவின் கனடிய அரசிற்கும் இடையேயான பல முன்னுரிமை நடவடிக்கைகள் ஒன்றாக உள்ளன. அமெரிக்கப் புதிய நிர்வாகம் கனடாவுடன் நல்லுறவைப் பேண விரும்புவதாகவும், கனடாவுடன் சேர்ந்து பணியாற்ற விரும்புவதாகவும் கனடிய அரசு அதிகாரிகள் இரண்டு தலைவர்களுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் பற்றிக் குறிப்பிட்டபோது தெரிவித்துள்ளனர்.

வெள்ளை மாளிகையின் புதிய பத்திரிகைச் செயலாளர் Jen Psaki, 2021 ஜனவரி 21இல் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கையில் "சுற்றுச்சூழலின் இழப்பில் பொருளாதார மீட்சியைக் கட்டியெழுப்பத் தேவையில்லை என ஜோ பைடன் நம்புகிறார். ஒபாமாவின் நிர்வாகத்தில் உப அதிபராக இருந்த ஜோ பைடன் 2015 ஆண்டிலேயே Keystone XL எண்ணைக் குழாய்த் திட்டத்தை எதிர்த்தார். அதையே அமெரிக்க அதிபரான பின்பும் அவர் செய்கிறார்" எனத் தெரிவித்துள்ளார்.

புதிய அமெரிக்க அதிபர் பதவி ஏற்றவுடன் Keystone XL எண்ணைக் குழாய்த் திட்ட அனுமதியை இரத்து செய்வார் என்ற செய்திகள் வெளிவந்த போது இத் திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனமான "TC Energy" ஜனவரி 18இல் இத்திட்டம் தொடர்பாக ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டிருந்தது.

அதில் 2015ஆம் ஆண்டில் ஒபாமா அரசு தடை செய்த எண்ணைக் குழாய்த் திட்டத்திற்கும் தற்போது நடைமுறைப் படுத்தப்படும் எண்ணைக் குழாய்த் திட்டத்திற்கும் சுற்றுச்சூழல் தொடர்பில் நிறைய வித்தியாசம் உள்ளது.

தற்போதைய எண்ணைய் குழாய்த் திட்டம் காபன் வெளியேற்றத்தில் நிகர

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)




## Isai Siddha -Ayurveda Academy of Canada

**கனடாவில் ஆயுர்வேத வைத்தியராக அனுமதிப்பத்திரம் பெற விரும்புகிறீர்களா?**

**ஆயுர்வேதத்தைக் கற்றுக் கொள்வதற்கும் உங்கள் வாழ்க்கையில் மற்றவர்களிற்குச் சிகிச்சை அளிப்பதற்கும் இது ஒரு பொன்னான வாய்ப்பு.**

**பாடநெறி முக்கியமாக ஆயுர்வேத மருத்துவ நடைமுறை, ஆயுர்வேத மருந்தகம் மற்றும் பஞ்சகர்மா சிகிச்சைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.**

**அடுத்த தொகுதி வகுப்புகள்**
**பெப்ரவரி 15, 2021 அன்று தொடங்குகின்றன.**

**ISAAC** ஆயுர்வேதத்தின் ஒரு குடும்பமாகும், இது ஆயுர்வேத பயிற்சியாளர்களுக்கு 2016 முதல் கல்வி கற்பித்தலில் சிறந்து விளங்குகிறது. இந்தப் பாடத் திட்டத்தில் பிரதானமாக விரிவுரைகள், மருத்துவ நடைமுறை, சமூக நடைமுறை மற்றும் ஆலோசனை ஆகியவை உள்ளடங்குகின்றன.

**ஆயுர்வேத மருத்துவம் கற்க ஆர்வமுள்ளவர்கள்:**
**எமது கல்லூரியை 416-831-4536 என்ற எண்ணில் அல்லது ratvijay@hotmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.**

எம்மிடம் கபசுரக் குடிநீர் மற்றும் தொற்று, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உடல் வலிமைக்கான பிற ஆயுர்வேத மருந்துகள் விற்பனைக்குண்டு.



OASIS LLP
ADVISORS & CPAs

## OUR SERVICES

**Tax**
- Personal Tax
- Corporate Tax
- HST Rental Rebate

**Accounting**
- Bookkeeping
- Payroll
- HST/WSIB Returns

**Business Advisory**
- Incorporation
- Tax Planning
- COVID-19 Loan Assistance

**Financial Statements**
- Notice to Reader
- Review Engagement
- Audit



**Ramana Shiva, CPA, CGA, LPA**
15 Wertheim Court, Suite 605
Richmond Hill, ON L4B 3H7
**416-318-5771**
ramana@oasisllp.ca
www.oasisllp.ca

# நாமும் நமது இல்லமும் 576

# வீடு வாங்க முன் அறியவேண்டிய ஆறு விடயங்கள்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

எல்லோருக்கும் தெரிந்த முதலீடுகளில் முக்கியமானதும் அதி கூடிய பெறுமதி யானதும் ஆதனம் வாங்குவதே. இதுவே முதல் தடவையாக ஆதனம் வாங்குவதாக இருந்தால் இது மேலும் ஒரு முக்கிய நிகழ்வாகும். ஆதனம் வாங்குவது மகிழ்ச்சியானதும் பெருமையானதுமான செயலாகும்.

ஓர் ஆதனம் வாங்கமுன் தெரிய வேண்டிய சில விடயங்கள்:

**1. அடமானக் கடனின் வட்டி வீதம்**

சரித்திரத்திலேயே அதி குறைந்த வட்டி வீதம், முதற்தடவை ஆதனம் வாங்கு வோருக்கு முக்கிய காரணமாக உள்ளது. 2020 (கோவிட் ஆண்டு) நிலையற்ற ஆண்டாகக் கரையேறி உள்ளது. தொழில் இழந்தோரின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது. பொருளாதாரத்தை நிலை நிறுத்த வட்டி வீதம் இறக்கப்பட்டது. இந்த வட்டி வீதம் குறைந்தது இரண்டு வருடங்களாவது தொடர்ந்து காணப்படும்.

* மாதாந்தக் கொடுப்பனவில் குறிப்பிட்ட சேமிப்பு

* விலையான ஆதனம் வாங்கக்கூடிய வசதி.

* அதிகமானோர் கடன் பெறக்கூடிய வசதிகள்

வட்டி வீதம் ஏற்கனவே மாறாததாக (closed mortgage) இருந்தால் குறைந்த வட்டி வீதத்தில் முழுப் பலனும் கிடையாது.

**2. ஆதனம் வாங்கும் பகுதியில் ஆதனச் சந்தை நிலவரம்:**

குறிப்பிட்ட பகுதியில் வாழ்வதற்கு வாங்குவதாக இருந்தால், உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். அத்துடன் முதலீடாக இருந் தால் எதிர்கால விலை அதிகரிப்பு, வாடகைக்கு எவ்வாறான வாடிக்கையாளர் கள் வருவார்கள் என்பதைப் பற்றிய அறிவைப் பெறுதல் வேண்டும். குறிப்பிட்ட பகுதியில் தொழில்புரியும் ஆதன முகவர்கள் சிறந்த அறிவுறுத்தல்களைத் தரக்கூடியதாக இருக்கும்.

**3. ஒன்றுக்கு மேற்பட்ட வாங்குவோருடன் போட்டி ஏற்படலாம்:**



ஆதனச் சந்தையில் போதியளவு ஆதனங்கள் விற்பனைக்கு இல்லாததால் குறிப்பிட்ட ஆதனங்களை வாங்குவதற்குப் பலர் போட்டியிடக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றது. இதனால் எதிர்பார்த்ததைவிட அதிக பணம் கொடுக்க வேண்டி ஏற்படலாம். அத்துடன் விற்பவரின் முன் நிபந்தனைகளை ஏற்பதுடன் வாங்குபவர் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் (no condition) ஆதனத்தை வாங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

**4. வருமானம் நிலையானது என்பதனை உறுதி செய்தல்:**

கோவிட்-19இனால் பலர் தொழிலை இழந்துள்ளனர். சிலருக்கு வருமானத்தில் இறக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே நிலையான வருமானம் உள்ளதா? செய்யும் தொழில் நிலையானதா? என்பவற்றை உறுதி செய்தல் வேண்டும். ஆதனம் வாங்குவதற்கான ஆரம்ப முதலீடு, வாங்கிய வீட்டை விற்பவரிடம் இருந்து வாங்குபவருக்கு மாற்றுவதற் கான செலவுகள் (closing cost) போன்ற வற்றிற்குப் போதியளவு பணம் தயாராக இருப்பதையும் ஞாபகத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**5. தகுந்த அடமானக் கடனை தெரிவு செய்தல்:**

டிஜிட்டல் உலகில் எவ்விதமான அடமான கடன் சிறந்தது என்பதை நீங்களே கண்டு கொள்ளலாம். ஆதன முகவரின் கடமை அடமானக் கடன் பெற்றுத்தருபவரின் கடமையிலிருந்து வித்தியாசப்படும். அடமானக்கடன் பெற்றுத் தருபவர், வெவ்வேறான நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உங்களுக்குச் சிறந்த வட்டி வீதத்தைக் பெற்றுத் தரக்கூடிய வசதிகள் உண்டு.

**6. குறுகிய கால நோக்கமும் நீண்ட கால நோக்கமும்:**

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)






# அமெரிக்க ஆட்சி மாற்றமும் ஜெனிவா கூட்டத் தொடரும்!

- விகிர்தன் -

ஏதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடர் மிகுந்த அவதானத்திற்குரியதாகக் கணிப்பிடப்படுகின்றது. இலங்கைக்கு சவாலான ஒரு நிலைமையை இக்கூட்டத் தொடர் ஏற்படுத்தும் என்கின்ற எதிர்வுகூறல்கள் பல தரப்புகளிலிருந்தும் வெளியிடப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமும் இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அதிக செல்வாக்கை செலுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பச்லெட் மிகவும் காட்டமான அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளார். எதிர்வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில், சமர்ப்பிக்கவுள்ள அந்த அறிக்கை இலங்கைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரிற்கு முன்னதாக இந்த அறிக்கையின் இறுதி வடிவம் பகிரங்கப்படுத்தப்படும்.

இந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னர் இலங்கையின் பதிலளிக்கும் உரிமைக்காகத் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தமக்கு கிடைத்துள்ளதை இலங்கை வெளிவிவகார அமைச்சும் உறுதி செய்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை வழங்கிய வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படாமை, மனித உரிமை விவகாரங்களில் தற்போதைய மற்றும் முந்தைய அரசுகள் அடைந்த தோல்வி, இணை அனுசரணை வழங்கிய தீர்மானங்களில் இருந்து இலங்கை விலகியுள்ளமை முதலான விடயங்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
மனித உரிமைகள் பிரச்சினையில் முன்னேற்றத்தைக் காண்பிப்பதற்காக 2015 ஆண்டு முதல் இந்த ஆண்டு மார்ச் வரை இரண்டு தீர்மானங்கள் மூலம் அரசுக்குப் போதியளவு அவகாசம் வழங்கப்பட்டது. ஆனால், இலங்கை அதனை நிறைவேற்றவில்லை.

மாறாக, சர்வதேச நாடுகளுக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும் இலங்கை அடிபணியாது என்கின்ற வீராவேச கோசங்களே தற்போதைய இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையிலேயே ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின்



அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இது அழுத்தமான விடயங்களை உள்ளடக்கிய அறிக்கை என்பது புரிந்துகொள்ளக் கூடியதே. இதனை ஒரு மோசமான அறிக்கை என அரசாங்கத் தரப்பினர் வர்ணிக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை அரசாங்கம் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும், இலங்கையின் இறைமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அது அமைந்துள்ளதெனவும் அரசாங்கத் தரப்பிலிருந்து கருத்து வெளியிடப்பட்டு வருகின்றது. முன்னைய அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய தீர்மானத்தை கடைசி வரையும் நடைமுறைப்படுத்தப்போவதில்லை என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்குப் பொருளாதார தடை விதிப்பது போன்ற பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், யுத்தக் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை பெறுவதற்கான சர்வதேச பொறிமுறையொன்றை ஏற்படுத்துவது குறித்து இலங்கை தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையானது புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழரின் செல்வாக்கினை அடிப்படையாக கொண்டது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை மீதான அழுத்தங்களை எதிர்கொள்ள அரசாங்கம் திட்டங்களை வகுக்க வேண்டும் என நாட்டிலுள்ள புத்திஜீவிகள் அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். உடனடியாக தேசிய மனித உரிமைத் திட்டம் ஒன்று வகுக்கப் பட வேண்டும் என்று பேராசிரியர் பிரதிபா மஹாநாமஹேவா அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தால் இலங்கைக்கு எதிரான மனித உரிமை குற்றச்சாட்டுகளைத் தொடர வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

டொனாலட் ட்ரம்பின் தோல்விக்குப் பின்னர் அனைத்து உலக அமைப்புகளும் மீண்டும் அமெரிக்காவுடன் இணைந்து கொண்டுள்ள நிலையில், ஐ.நா கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது. 2015ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட மனித உரிமை பிரேரணையை மீண்டும் முன்கொண்டு செல்ல அனைத்து நாடுகளும் அமெரிக்கப் பின்னணியில் ஆதரவளிக்கும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையில், ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்காவின் புதிய நிர்வாகம் மனித உரிமை விவகாரங்களில் இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்கும் என்பதை இலங்கைக்கான தூதுவர் அலைனா டெப்பிளிட்ஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்கா மீண்டும் மனித உரிமை பேரவையில் இணைந்துகொள்ளுமா என்பது குறித்து தற்போதைக்கு தெரிவிக்க முடியாது எனவும், ஆனால், ஏனைய நாடுகள் மூலமாக இலங்கையில் உண்மையான அமைதி காணப்படுவதை உறுதி செய்வதற்காக பாடுபடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் தெரிவித்துள்ள கருத்துக்களையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. இலங்கையில் உள்ள குற்றவியல் நீதி அமைப்பு, பயங்கரவாத குற்றச்சாட்டு தொடர்பான விடயத்தை எதிர்கொள்ளும் போது மனித உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

குற்றவியல் நீதி அமைப்பு முதலில் சட்டம், பயங்கரவாதத்தின் வரையறை மற்றும், வழக்குகளின் பின்னிணைப்பை நிவர்த்தி செய்வது உள்ளிட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கட்டமைப்பை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பயங்கரவாத செயற்பாட்டில் ஈடுபட்டதான சந்தேகத்தின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்ட அல்லது தண்டிக்கப்பட்டோருக்குப் புனர்வாழ்வு வழங்குவதன் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்போது இலங்கை அரசாங்கம் ஜெனிவா கூட்டத்தொடரில் எதிர்கொள்ளவிருக்கும் சிக்கல்கள் குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிகின்றது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்ந்து அது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகளை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவினால் மூவரடங்கிய விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம் நவாஸின் தலைமையிலான குறித்த விசாரணைக் குழு இம்மாதம் 20ஆம் திகதி முதல் செயற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தாங்கள் மனித உரிமைகளுக்கான ஆணையாளரின் அலுவலகத்துடன் சில விவாதங்களை நடத்தி வருவதாகவும், சில விடயங்களில் ஒருவித உடன்பாட்டை எட்ட முயற்சிப்பதாகவும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கையில் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு முறையான பதிலை வெளியிடவுள்ளதாகவும் அரசாங்கத் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை ஒருபுறமிருக்க, இன்று ஏற்பட்டிருக்கும் இந்த சூழ்நிலையை தமிழர் தரப்பு எவ்வாறு கையாளப் போகின்றது என்கின்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் தற்போது எழுந்துள்ளது.

வரப்போகும் ஜெனிவா கூட்டத் தொடரில் தமிழ் தேசியம் சார்ந்த அனைத்து தமிழ் கட்சிகளும் ஒருமித்த கருத்தை முன்வைக்க வேண்டும் என்கின்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக பல சந்திப்புக்களை தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் மேற்கொண்டுள்ளன. எனினும், யார் முதன்மையானவர் என்கின்ற வழமையான போட்டித் தன்மை

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்களால் பல்வேறு ஆபத்துக்கள்!




இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் பாரிய பாதிப்புக்களையும் மோசமான விளைவு களையும் ஏற்படுத்தி வருகின்றது. இலங்கையும் இந்தியாவும் நினைத்தால் இதற்கு நிரந்தரமான தீர்வு ஒன்றை ஏற்படுத்துவது இயலாத காரியமல்ல. குறிப்பாக, இந்தியாவே இதற்கொரு முடிவை எடுக்க வேண்டும்.

இந்திய-தமிழக மீனவர்கள் எல்லை கடந்து வந்து வட மாகாணக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் நடவடிக்கைகள் நீண்ட காலமாகவே நடைபெற்று வருகின்றன. இலங்கையில்-வடமாகாணத்தில் தடை செய்யப்பட்டுள்ள மீன்பிடி படகுகள், உபகரணங்களுடன் வரும் தமிழக மீனவர்கள் மீன்களை பிடித்துச் செல்வது மட்டுமல்ல, வடக்கின் கடல்வளத்தையும் நாசப்படுத்தி செல்கின்றனர்.

வட மாகாண மீனவர்கள் இதனை இலங்கை அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் முறையிட்டு வருவதோடு, பல போராட்டங் களையும் முன்னெடுத்து வருகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்திலும் அறிக்கைகளைக் கையளித்து எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர் களால் தங்களுக்கு ஏற்படும் பாதிப்புக் களையும் எடுத்து விளக்கி வருகின்றனர்.

அண்மைக் காலத்தில் இந்திய மீனவர் களால் வடக்கு மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ் வாறாக இந்திய மீனவர்கள் தங்கள் எல்லைக்குள் வந்து அடாவடித்தனம் புரிந்தால்-அவர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால்-தாங்களே அவர்களைத் தாக்கி விரட்ட வேண்டி வரும் என அண்மையில் முல்லைத்தீவு மீனவர்கள் தெரிவித்திருந்த னர். இவ்வாறானதொரு நிலைமை ஏற் படாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கை களை இந்தியாவும் இலங்கையும் இணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இரு நாட்டு மீனவர் களையும் மோதவிட்டு இரு நாடுகளின் மத்திய அரசுகளும் வேடிக்கைப் பார்க்க முடியாது.

சில நாட்களுக்கு முன்னர் எல்லை தாண்டி வந்த இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுற்றிவளைத்த போது இடம்பெற்ற உயிரிழப்புக்கள் விபரீதமானதொரு சம்பவமாகும்.

கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணம்-நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களின் 50இற்கும் அதிகமான படகுகளை இலங்கை கடற் படையினர் சுற்றவளைத்த போது ஒரு படகு இலங்கை கடற்படைப் படகுடன் மோதி விபத்திற்குள்ளானது. இந்தியப் படகு ஆழ்கடலுக்குள் முழுமையாக மூழ்கியது. அந்தப் படகுடன் மூழ்கிக் காணாமல் போன மீனவர்கள் இரண்டு தினங்களின் பின்னர் சடலங்களாகவே மீட்கப்பட்டனர்.

இதனையடுத்து, இலங்கைக் கடற் படையினர் தமிழக மீனவர்களின் படகை நடுக் கடலில் மூழ்கடித்ததாக தெரிவித்து தமிழக மீனவர்கள் போராட்டங்களையும் நடத்தினர். 1974ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட கச்சத்தீவு ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு செயற்பட்டு வருவதாகவும் தமிழக மீனவர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

எல்லை தாண்டி வந்து மீன்பிடி நடவடிக்கைகளில் இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக ஈடுபடுவதாலேயே வட கடலில் மீனவர்களுக்கிடையே பிரச்சினை கள் ஏற்படுகின்றன என்றும், வடக்கு மீனவர்கள் மீது பல தாக்குதல்களை இந்திய மீனவர்களே மேற்கொண்டு வருகின்றனர் என்றும் வட மாகாண மீனவர்கள் கூறுகின்றனர்.

“இலங்கைக் கடற்பரப்பில் இடம்பெற்ற தமிழக மீனவர்களின் உயிரிழப்பு கவலையை ஏற்படுத்துகின்றது. அவர் களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதேவேளை, எமது கடற்பரப்பிற்குள் நுழைய வேண்டாம் என மீண்டும் மீண்டும் அவர்களைக் கோருகின்றோம்” என வட மாகாண மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எல்லையைத் தாண்டும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்யும் நடவடிக்கையை வரவேற்ப தாகவும், இது தொடர வேண்டும் என்றும் வடக்கு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.



இதேவேளை, கறுப்புக் கொடிகளைப் படகில் கட்டிக்கொண்டு மீன்பிடிக்க எல்லைக்குள் வருவோம் என தமிழக மீனவர்கள் அறிவித்துள்ளதை அனுமதிக்க முடியாது என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் சமாசத்தினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி தொழிலில் ஈடுபடுவதை இந்திய மீனவர்கள் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியும், இலங்கை அரசிடம் நீதி கோரியும் யாழ்ப்பாணம் மாவட்ட கடற் தொழிலாளர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்ததுடன், கடற் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அறிக்கை ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இதனையடுத்து மீனவர் விவகாரம் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவ தற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வினால் மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரைகள் வழங்கப்பட்ட பின்னர் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமானதோர் தீர்வு ஏற்படுமா என்பது சந்தேகமே.

ஏனெனில், இந்தப் பிரச்சினை நீண்ட காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இது தொடர்பில் பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றினால் எவ்வித முன்னேற்றமும் ஏற் படவில்லை. மாறாக இந்திய மீனவர்களின் எல்லை தாண்டும் நடவடிக்கைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM™
31 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

DREAM HOME
Buy , Sell, Invest or Rent
Residential or Commercial Properties
For All Your Real Estate Needs
Call Me With Confidence
24 / 7
More than 10 years of Successful Experience

WIGNA Sivapathasundaram
416 317 8449
RE/MAX COMMUNITY
Realty Inc. Brokerage
RAISING YOUR VALUE


நம்மை நாமே
காத்துக் கொள்வோம்!
முழங்கையால்
மறைத்து
இருமலாம்
உங்கள்
கைகளைக்
கழுவுங்கள்
2 m
எப்போதும் 2மீ
இடைவெளிவிடுங்கள்
உங்கள் முகத்தை
மறைக்கவும்
Québec.ca/coronavirus
1 877 644-4545
Votre gouvernement
Québec

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 Bedroom walkout bsmt for rent. Small working family preferred. Close to School & facilities. Avail. March 01, 2021.
**416.660.4874 / 416.258.8755**

**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Sept. entrance, 1 parking. Close to all facilities. Avail. immediately.
**416.494.7149 /647.467.1622**

**ELLESMERE & NEILSON**
2 Bedroom fully renovated bsmt for rent. kitchen, Sep. entrance, Sep. patio, laundry. Family preferred. Avail. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.560.1812**

**FINCH & NEILSON**
1 Bedroom BSMT for rent. Sep. entrance 1 Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **(416) 670-7493**

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Kitchen & washroom with Sep. entrance. Starting February 1st. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416-836-5284**

**MCCOWAN & STEELES**
1 bedroom bsmt for rent. Sep. entrance. 1 Parking. Close to TTC, YRT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.727.4545**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Female preferred. Close to bus & other all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.848.1143**

**ELLESMERE & BELLAMY**
2 Bedroom basement for rent. Sep.entrance. Close to all facilities. Avail. February 01, 2021.
தொடர்புகளுக்கு: **416-837-5023**

**MARKHAM & DENISON**
2 Bedroom basement for rent. Sep. entrance. Parking, Laundry. Close to costco & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.7595**

**MORNINGSIDE & FINCH**
2 bedroom BSMT for rent. Sep.entrance, Close to TTC. Suitable for a couple, students or bachelors. Avail. from March 01, 2021.
contact at: **647.606.8326** ( Please text)

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416-613-1792**

**NEILSON & FINCH**
2 Bedroom Walkout Bsmt for Rent. Parking & Laundry. Couple or Small Family Preferred. No pet allowed. No smoker. Avai. February 01, 2021. Rent $1500 + 40% utility. தொடர்புகளுக்கு: **416. 545. 9959**

31 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை வெளியிடப்படும் (vlambaram.com) சிறு விளம்பரங்களைக் கொண்ட 10,11,12 ஆகிய பக்கங்களின் அச்சுப் பிரதிகளை GTA Square இலும் ஏனைய முன்னைய தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## BASEMENT FOR RENT

**MEADOWVALE & ELLESEMERE**
2 Bedrooms Bsmt for Rent. Sep. Entrance. 2 parking. Close to TTC, School, college, U of T & HWY 401. No pets or no smoking.
தொடர்புகளுக்கு: **647.250.4343**

**MORNINGSIDE & STAINES RD**
2 Bedroom, 1 washrooms, Sep. laundry, sep. Entrance, 2 parking lot spot. Close to TTC, No smoking & No pets ( expecting Asian )
தொடர்புகளுக்கு: **416.388.2794**

**WARDEN & FINCH**
1 Bedroom walkout bsmt for rent. Avail. March 01, 2021.
தொடர்புகளுக்கு: **647.667.0482**

**MEADOWVALE & SHEPPARD**
3 Bedrooms Bsmt for Rent. Sep. Entrance. Laundry. Students or family preferred. Close to U of T. Avail. February 01, 2021.
**437.778.6744 / 647.717.1699**

**MARKHAM & STEELES**
1 bedroom for rent. Sep. entrance. Common washer / dryer. Close to all facilities.
**647.678.0611/416.587.6564**

**NEILSON & FINCH**
1 bedroom Bsmt apartment for rent . Sep. Entrance, parking, laundry, utilities. Two min. walk to bus. Avail.immediately
தொடர்புகளுக்கு: **416.258.7816**

**MARKHAM &14TH AVE.**
1 bedroom Bsmt for rent. Sep. Entrance, parking, laundry. There is a 24 hour bus available. Avail. February 01, 2021.
தொடர்புகளுக்கு: **647-761-8270**

**SALEM & TAUNTON ( AJAX )**
2 bedroom Bsmt for rent. Sep. Entrance, 1/2 parking, Laundry. No Pets, Non Smokers, Couple preferred. Avail. Immediately.
**Contact us: 416-805-2714**

**WHITES RD & FINCH (PICKERING)**
1 Bedroom Brand New Basement For Rent Sep.Entrance, Own laundry & Parking. No pets & No smoking. Avail. Immediately
தொடர்புகளுக்கு: **416-879-8166**

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom Basement for rent. one car parking Close to School Shopping, TTC, Avail. from February 01, 2021.
**289.244.8555/ 647.927.5541**

## BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVE.**
2 bedroom Bsmt for rent. Sep. Entrance, 1 parking. No pets. Avail.immediately
தொடர்புகளுக்கு: **647-867-5307**

**MCCOWAN & DENISON**
2 bedrooms basement for rent. Sep. Entrance. laundry. Close to all facilities. Avail. Immediately. **Call (647) 504 7982**

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep.entrance Families only 2 Adult & children. Close to all facilities. Avail. February 01, 2021.
**905.554.7928 / 647.401.7928**

**MEADOWVALE & ELLESMERE**
2 bedroom basement for rent. Sep.entrance. Close to all facilities.
**Contact number : 647.409.1552**

**MARKHAM & STEELES**
3 bedroom newly renovated, basement for rent. Sep. entrance, parking. Small family preferred. No smoking, no pets.
**Contact: (647) 712-2692**

**9 TH LINE AND HIGHWAY 7**
2 bedrooms Renovated bsmt for rent. Sep. entrance. parking, wifi including. 5 min walk to markham stouffville hospital.
தொடர்புகளுக்கு: **647.771.7693**

**MIDLAND & LAWREMCE**
1 bedroom basement for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.670.3349**

**MORNINGSIDE & OASIS BLVD**
1 bedroom bsmt for rent. Laundry and car parking. Only for Pentecost christians. Close to school, TTC. Avail.Immediately
**Contact: 416.831.8549**

**MORNINGSIDE & MCLEVIN**
2 bedroom walk out bsmnt 1washroom sep. laundry, 1 parking, school infront close to bus stop. No smoke , No pets.
தொடர்புகளுக்கு: **416 732 6931**

**STEELES & STAINES RD**
2 Bedroom, 1 washrooms, Sep. laundry, sep.Entrance with 2 parking lot spot. No smoking & No pets (expecting Sri lankan )
Contact: **416.388.2794**

**MCCOWAN & ELSON**
2 bedrooms bsmt for rent. Sep.entrance. Avail.Immediately.
தொடர்புகளுக்கு: **647.782.2777**

## BASEMENT FOR RENT

**Morningside & Morningview Trail**
2 Bedrooms newly renovated Bsmt for Rent. Living room & 1 parking. Family preferred.
தொடர்புகளுக்கு: **(416) 564- 4200**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom furnished Bsmt for Rent. Sep. Entrance. No pets or no smoke. Close to 401,mall, TTC@door U of T, centaial. Parking
தொடர்புகளுக்கு: **416.834.1081**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MILITARY TRAIL**
3 bedroom walk out Bsmt for rent. 2 full washroom. separate laundry, close to schools etc.Close to University & schools. No pets. Avail. February 01, 2021.
தொடர்புகளுக்கு: **416.670.8331**

## BASEMENT FOR RENT

**STAINES & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.284.2346**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom basement for rent. Sep. entrance. Laundry. Close to all facilities. Avail. immediately.
**MORNINGSIDE & ELLESEMERE**
parchulor basement for rent. Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **(416) 818-1542**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedroom newly renovated bsmt for rent. 2 washroom, side door, included car parking. More information please to call:
**647-215-2533/647-588-2533**

## வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 9, 10

# ROOM FOR RENT

**MORNINGSIDE & MCLEVIN**
Room for rent. Parking, Laundry. Men preferred. Close to 401/ ttc / school Close to all Facilities.
**416.875.1211 / 416.720.4472**

**MIDDLEFIELD & FINCH**
1Room for rent in 2 bedroom bsmt. Looking for single males. No Parking,. Close to bus route. Close to all Facilities.
**416.502-3048 / 416.409-5286**

**KENNEDY & LAWRENCE**
1Room for rent in a bsmt. Sep. Entrance. Only women. Close to all Facilities.
தொடர்புகளுக்கு: **647.709.8484**

**MARKHAM & LAWRENCE**
Room for rent. Sept. Entrance. 1 parking, Laundry. No kitchen NO SMOKING , NO PETS. Close to bus stop & groceries store.
**Kamal: 647.763.5223**

**SCARB. GOLF CLUB & ELLESMERE**
1 furnished room for rent in a bsmt. Kitchen, washroom & laundry All utilities included. Prefer Males only.
தொடர்புகளுக்கு: **416.519.1016**

**MARKHAM & ELLESMERE**
1 master bedroom available in a 2 bedroom apartment. Rent $800. Female or couples preferred. Avail. March 01, 2021.
தொடர்புகளுக்கு: **416.725.4735**

**MEADOWVALE & SHEPPARD**
1 Room for rent in a house. Female only. சாப்பாடு Arrangement செய்து தரப்படும். Close to U of T. & centennial campus.
**437.778.6744 / 647.717.1699**

**MORNINGSIDE & STAINES**
1 room for rent. Only for women Including all utility bills. No car parking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.831.3857**

# BASEMENT/ROOM FOR RENT

**MARKHAM & DENISON**
New 2 Bedroom Bsmt for Rent. No pets, Non smoker. Sep. entrance,1 parking. Avail. March 01, 2021.
Also **1 Room** for rent in upstairs for Rent in a 4 bedroom house. Bsmt rent is $1600 +utilities,1 Room upstairs is $800.
தொடர்புகளுக்கு: **(416) 826.8811**

# BASEMENT FOR RENT

**ELLESEMERE & MILITARY TRAIL**
3 bedroom BSMT for rent. Sep.entrance. Walking distance to UTSC, Looking for students/small families! Each bedroom has its own bathroom! Utilities included. Minutes from ON-Highway 401 No pets. No smoking! Rent negotiable!
**Contact via text: 416.876.3241**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# BASEMENT FOR RENT

**MCCOWAN & BRIMORTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to Scarborough Centre. Available immediately.
**416-918-5065/365-988-6673**

# BASEMENT FOR RENT

**MORNINGSIDE & STAINES**
2 bedroom Bsmt for rent. Sep. Entrance,2 parking, laundry. Close TTC, School, Shopping center. Avail. February 01, 2021.
தொடர்புகளுக்கு :
**416.562.8748**

# BASEMENT FOR RENT

**9TH LINE & STEELES**
2 bedroom New basement for rent. 1 car parking lot, sep. entrance, sep. laundry room.
**Contact. 416-832-6276**

# BASEMENT FOR RENT

**BRIMLEY & FINCH**
2 Bedrooms, Sep. Entrance , Kitchen & Washroom, shared laundry. No Pets & No Smoking. Close to all Facilities. Avail. January 15, 2021.
**CALL OR TEXT:**
**647.642.2323 or 416.335.3460**

# BASEMENT FOR RENT

**MARKHAM & LAWRENCE**
Newly Renovated Furnished Basement for Rent:2 Bedrooms + Laundry, Washroom, Kitchen, & Living Room.1 Parking Spot (Walking Distance to Bus Stops, Cedarbrae Mall, Grocery Stores, Schools etc) Avail.immediately.
**Please call or text 647-990-5969**

# ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**
1 large rooms for rent in an Apartment with furniture. Parking, internet. No smoke or no pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.276.6884**

# HOUSE FOR RENT

**MCCOWAN & STEELES**
4 bedroom house for rent. Close to all facilities. TTC, YRT. Shopping. Avail. February 01, 2021.
தொடர்புகளுக்கு :
**416-268-1739**

# HOUSE FOR RENT

**MARKHAM ROAD & ELLESMERE ROAD**
3 Bedrooms, 1 Washroom. Bungalow House, No Pet , No Smoking, Close to all Amenities. Available Immediately.
**Call: 416-414-2083**

**LAWRENCE AVE & BELLAMY RD.**
3 Bedrooms Bungalow house Upper level for Rent.Steps to TTC bus & nearby all amenities. No Smoking inside the house. No pets.
தொடர்புகளுக்கு: **416. 558.2228**

# ROOMS FOR RENT

**MARKHAM & DENISON**
3 Bedroom,2 Bathroom new bsmt for rent. Sep.entrance, car parking, sep.laundry. only family. Close to all facilities. Avail. immediately. Near cosco.
தொடர்புகளுக்கு: **647.292.1265**

# ROOMS FOR RENT

**EGLINTON/BELLAMY - Scarborough**
Rooms for rent in a bsmt. Sep. entrance. rent $600 Per Room. Shared kitchen, washroom & laundry.
**K. Aloysius - Broker**
**Royal Lepage Vision Realty INC.**
**416-993-9709**

# ROOM FOR RENT

**9TH LINE & 14TH AVE**
(Boxgrove Neighbourhood - close to Steeles) 1 Bedrm+ 1 ensuite bathroom in house. Rent: $650 utilities, parking, laundry. No Pets/No smoking/ Female Preferred
**Please call/text: 647.327.0553**

# ROOM FOR RENT

**BIRCHMOUNT & FINCH**
2 Rooms for rent. Looking for students (female) or couple to move in. Avail. February 01, 2021. தொடர்புகளுக்கு :
**416-473-7766 / 416-567-7269**

# HOUSE FOR RENT

**NEILSON & ELLESMERE**
3 bed house (bungalow ) for rent. $2,300. 1.5 washrooms. Master bedroom with walk-in closet & ensuite 2 pc washroom & 1 full washroom, plus Utilities 60% including car garage & total 2 parking. Avail. immediately
**call Ganesh 416-880-3636**

முடிவு தெரியாத நம் வாழ்வில் நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் நம் வாழ்க்கையை மாற்றிக்கொண்டே இருக்கும்.

# APARTMENT FOR RENT

**Lawerance and Pharmacy**
Commercial plaza 2 bedroom apartment available for a family. Avail. from February 2021.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

# HOUSE FOR RENT

**HWY 401 & MEADOWVALE**
3 bedroom & 1 office room house for rent. Sunny / Bright House. 2 washroom & 1 powder room . 2 car parking & backyard Close to school/UfT/College/TTC/Pan-Am etc. No pets and no smoking.
தொடர்புகளுக்கு: **647.918.5274**

# HOUSE FOR RENT

**STEELES & STAINES**
3 Bedroom & 3 washroom house (Main floor) for rent. Rent $2300. 2 parking on driveway. Grage not include. Close to public school, TTC & park. 2 bed, 1 washroom & kitchen basement also available
தொடர்புகளுக்கு: **416.509.7247**

# HOUSE/BASEMENT FOR RENT

**PORT UNION & LAWRENCE**
2 Bedroom Bungalow house for rent. Rent $2000+Utilities. 4 Parking, laundry. 1 bedroom **basment** also available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **(416) 707-1674**

# HOUSE FOR RENT

**MARKHAM & STEELES**
Newly fully renovated three bedrooms & one full washroom bungalow house main floor for rent . Bus stop five minutes walking distance, school, bank, mall, HWY 401 & many others are all five minutes or less car ride away. FAMILY ONLY.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

# HOUSE FOR RENT

**MIDLAND & LAWRENCE**
Renovated 3 bedroom house with 2 Bedroom Basement for rent. Separate Entrance with Parking. Available Immediately.
Pl. Call For **Raj - 416.702.2030**

# HOUSE /BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
4 Bedrooms New **house for rent** . Close to Costco, 407, bus, banks & lots of facilities nearby.
One bedroom **basement for rent** with sep. entrance. Lots of facilities nearby. No smoking or No pets.
தொடர்புகளுக்கு: **416.879.9603**

மேலும் பக்கங்கள் 9, 11

## HOUSE/BASEMENT FOR RENT

**FINCH & MIDDLEFIELD**
1 bedroom basement for rent.
**MARKHAM & STEELES**
3 bedrooms house for rent.
தொடர்புகளுக்கு:
**647.686.8590**

## VAANI ACADEMY

**3 Years To High School & Adult.**
Vocal , Violin, Tamil
இணைய வழி ஊடாக வகுப்புகள் நடைபெறுகிறது.
**Call : 416.560.1812**
**Mrs. T Srijena (BFA Music)**
**Email: thayanasri@gmail.com**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**NEWMARKET & AURORA**
**Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை.
**647.308.7221**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்ரோவில் பகுதியில் 70 வயதான பெண் ஒருவரை பராமரிக்க பெண் பராமரிப்பாளர் தேவை. ஊதியம் வேலை நேரம் பேசி தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு : **416.558.4998**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & KINGSTON ROAD**
2 bedrooms Bsmt for Rent. Sep.Entrance. Parking students or Family preferred. Close to U of T Avail. February 01, 2021.
**MORNINGSIDE & KINGSTON ROAD**
1 bedroom Bsmt for Rent. Sep.Entrance. laundry, parking students or Family preferred.Close to U of T. Avail. February 01, 2021.
தொடர்புகளுக்கு: **416.722.1621 / 647.247.3830**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் வாழும் Wheel Chairஇல் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு (Full Time) பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை. வெளிநாட்டில் இருந்தும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
தொடர்புகளுக்கு: **647.540.9520**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## HOUSE FOR RENT

**LAWRENCE & OVERTURE**
3 bedroom house (main floor) for rent. 1 bath, laundry in unit, new kitchen with stainless steel appliances, new flooring windows. 1parking on driveway Close to all amenities, TTC, Hwy 401, close to Guildwood GO station, Avail from March 01, 2021. $2050 (neg) +utilities (50%). Family preferred.
**Contact Vidhya : 416-931-1165**

**செய்தது தவறு என்று தெரிய வரும்போது திருத்திக்கொள்ள முயற்சி செய்வோரை விட மறைத்துக்கொள்ள முயற்சி செய்வோரே அதிகம்!**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**
**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
Newly renovated bsmt for rent. Includes 1 bedroom, living room, washroom, kitchen, laundry, parking spot, Utilities & wifi. Walking distance to bus stops, grocery stores & schools.
**Please call or text : 647-712-5258**

## HOUSE FOR RENT

**KENNEDY Road, Scarborough**
**LAWRENCE.... EGLINTON**
THREE ROOMS PLUS LIVING ROOM.
kitchen+dining+All facilities. Fridge, LL washroom.
Close to all facilities. Pl call: **416.285.4695**

## BASEMENT FOR RENT

**MEADOWVALE & SHEPPARD**
2 bedroom Bsmt for rent. Sep. entrance. Open Concept Living Room Combined With Dining. Family Size Kitchen. Good Sized Bedroom. Close to Hospital, TTC, School's, Hwy 401, Much More... Tenant Pays 30% Of All Utilities And Responsible. Please No Smokers And No pets. Avail. After January 25, 2021. தொடர்புகளுக்கு: **416.834.3262**

## OFFICE SPACE FOR RENT

Office area and well equipped educational training/boardroom rooms are available for lease. Rooms are available for $650 and above.
It is suitable for small individual office, training, conferences & professional meetings with all facilities.
**Two locations :** Toronto: **Markham and Finch** - Mississauga: **Hurontario and Matheson Blvd.**
**Please contact Sam at : 416-918-9848/416-857-7603**

# கொண்டாட்டம்



பேய்க்கும் நோய்க்கும் இரவிலே கொண்டாட்டம்
பெரியதனம் காரருக்கோ பொழுதெல்லாம் கொண்டாட்டம்
தாய்க்கும் சேய்க்கும் காலமெலாம் கொண்டாட்டம்
தானைத் தலைவனுக்கோ வெற்றியில் கொண்டாட்டம்
பொய்க்கும் மெய்க்கும் மோதலிலே கொண்டாட்டம்
பொல்லாவஞ்ச கர்க்கோ பிறர் அழிவினிலே கொண்டாட்டம்
வாய்க்கும் வயிற்றுக்கும் உண்பதிலே கொண்டாட்டம்
வறுமைசூழ் மாந்தர்க்கோ வசதிவந்தால் கொண்டாட்டம்!

வாடிக்கிடக்கும் பயிர்களுக்கு மழைவீழ்ந்தால் கொண்டாட்டம்
வாசமிகு மலர்களுக்கோ வண்டணைந்தால் கொண்டாட்டம்
பாடிவரும் குயில்களுக்கு பங்குனியில் கொண்டாட்டம்
பாசமுள்ள பசுவுக்கோ கன்றைக்கண்டால் கொண்டாட்டம்
கூடியொன்றாய் வாழ்ந்தால் குடும்பத்திற்கும் கொண்டாட்டம்
கூலிகிடைத்த துவிட்டால் தொழிலாளிக்குக் கொண்டாட்டம்
அடிமையாய் வாழ்வோர்க்கு சுதந்திரமே கொண்டாட்டம்
ஆண்டவனைத் தொழுவோர்க்கு அமைதியிலே கொண்டாட்டம்!

கருமுகில்கள் வானில்வந்தால் மயில்களுக்குக் கொண்டாடடம்
கவினுறு காட்சிகண்டால் கவிஞருக்குக் கொண்டாட்டம்
பருவமழை பெய்கையிலே உழவருக்குக் கொண்டாட்டம்
பால்நிலவு வானில்வர காதலர்க்குக் கொண்டாட்டம்
அருவிகள் கீழ்க்காணில் அனைவருக்கும் கொண்டாட்டம்
அன்னையின் அணைப்பினிலே குழந்தைகட்குக் கொண்டாட்டம்
குருவிகளின் ஒலி கேட்டால் கேட்போர்க்குக் கொண்டாட்டம்
கொஞ்சுதமிழ் கொலுவிருந்தால் நெஞ்சமெல்லாம் கொண்டாட்டம்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்



**B.J** ரெய்லரிங் அன் ஜுவலரி
We provide training in Jewellery making and Tailoring
**TAILORING & JEWELLERY MAKING**
**ONLINE CLASSES AVAILABLE**
தொடர்புகளுக்கு: **416-720-4472**
email: jegathees2007@gmail.com



# நாமும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

குடும்பமாக வாழ்வதற்காக அல்லது முதலீடிற்காக மக்கள் ஆதனம் வாங்குகின்றனர்.

* உங்கள் நிதி நிலைமையில் திடமான தன்மை இருந்தால் நீங்கள் முதலீட்டுக் காக ஆதனத்தை வாங்கலாம். வாங்கும் ஆதனத்திற்கு 20%இற்கு மேலான ஆரம்ப முதலீடு (Down payment ) சிறந்தது.

* நிதி நிறுவனங்களிலிருந்து குறைந்த வட்டி வீதத்திற்கு உங்கள் அடமானக் கடனைப் பெற்றுக் கொள்ளலாம்.

* முதல் தடவை ஆதனம் வாங்குவோ ருக்குக் குறைந்த ஆரம்ப முதலீடு போதுமானது.

* வாங்குவோருக்குச் சாதகமான சந்தையா அல்லது விற்போருக்கு சாதகமான சந்தையா என்பதனை உறுதி செய்தல் நல்லது.

வாங்குவோருக்குச் சாதகமான சந்தையாக இருப்பின் போட்டிகள் இல்லாமல் ஆதனம் வாங்கக் கூடியதாக இருக்கும்.



* முதலீட்டுக்கான ஆதனம் வாங்குவதாக இருந்தால் எதிர்காலத்தில் விலை அதிகரிப்பு மற்றும் வாடகைக்குக் கொடுக்கக் கூடிய வசதிகளில் கவனம் கொள்ள வேண்டும்.

ஆதனம் அமைந்திருக்கும் இடம் அத்துடன் ஆதன முதலீடு என்பது நீண்டகால முதலீடாகும் என்பதனை முக்கியமாக மனதில் கொள்ள வேண்டும்.

# எல்லை...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன் பிடிப்பதால் வட மாகாண மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்- தடை செய்யப்பட்ட உபகரணங்களுடனும், படகுகளுடனும் வருவதால் கடல்வளம் பாதிக்கப்படுகின் றது என்பதற்கும் அப்பால் மீனவர்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் கடத்தலையும் கட்டுப்படுத்த வேண்டும். கேரள கஞ்சா யாழ்ப்பாணம், மன்னார் போன்ற வட மாகாண கடற் பரப்பினூகவே கடத்தி வரப்படுகின்றது.

இந்தக் கஞ்சா போதைப்பொருள் வடக்கில் இருந்தே இலங்கை முழுவதும் கடத்தப்படு கின்றது. இதனைக் கட்டுப்படுத்துவ தானால் இலங்கை-இந்திய கடற்படையினர் இரு பகுதிகளிலும் கண்காணிப்பு நட வடிக்கைகளை அதிகரிக்க வேண்டும். இந்தியக் கடற்பரப்பிலேயே இது தடுக்கப் படுமானால் இலங்கைப் படையினருடன் முரண்படும் நிலை ஏற்படாது.

அடுத்ததாக, இன்று உலகை ஆட்டிப் படைக்கும் கொரோனா வைரஸ் பரவலும் இந்திய மீனவர்கள் மூலம் இலங்கையின் வட மாகாணத்தில் அதிகரிக்கக் கூடிய ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளமையினை இங்கு குறிப்பிட வேண்டும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை யில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப் பட்டுள்ளது. இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 9 பேர், ஊர்காவற்றுறை நீதிமன்றின் உத்தரவின்



கீழ் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர் களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களில் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டும் நடவடிக்கைகளினால் வட மாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படு வது மட்டுமல்ல, அதையும்விடப் பல ஆபத்தான பாதிப்புக்களும் ஏற்படும். எனவே, மீனவர்களின் எல்லை தாண்டும் நடவடிக்கைகளுக்கு விரைவில் ஒரு தீர்வைக் காண்பது மிக அத்தியாவசியமானது.

# அமெரிக்கப்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

பூச்சியத்தை 2023ஆம் ஆண்டில் அடைகிறது. அத்துடன் இந்த எண்ணைக் குழாய்த் திட்டம் 2030ஆம் ஆண்டில் இருந்து முற்றுமுழுதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களால் (Renewable energy sources) இயக்கப்பட உள்ளது. இதனால் 2015இல் திட்டமிடப்பட்ட Keystone XL எண்ணைக் குழாய்த் திட்டத்திற்கும் தற் போது நடைமுறையில் உள்ள எண்ணைக் குழாய் திட்டத்திற்கும் சுற்றுச்சூழல் விடயத்தில் பெரிய வேறுபாடு உள்ளது என TC Energy நிறுவனம் அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

அமெரிக்காவிற்கான கனடாவின் தூதுவர் Kirsten Hilman, CBC ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் "தன்னால் முடியும் அளவிற்கு Keystone XL எண்ணைக் குழாய்த் திட்டம் பற்றி விரிவாக ஜோ பைடனின் புதிய நிர்வாகத்திற்கு விளக்கி யிருந்தேன். தான் கடந்த பல மாதங்களாக அல்பேட்டா மாகாண அரசு, தொழில் நிறுவனங்கள், கனடிய மத்திய அரசு என்பவற்றுடன் ஜோ பைடனின் ஆலோசகர்களுக்கும் அவருடைய புதிய நிர்வாகத்திற்கும் இந்த எண்ணைக் குழாய்த் திட்டம் பற்றி விரிவாக விளக்குவ தில் ஈடுபட்டிருந்தேன்" எனக் கூறினார்.

இந்த Keystone XL எண்ணைக் குழாய்த் திட்டம் ஒரு நாளுக்கு 800,000 பீப்பாக்கள் (Barrels) எண்ணையை அல்பேட்டா மாகாணத்தில் இருந்து Texas Gulf Coast இற்கு Montana, South Dakota, Nebraska,



Kansas மற்றும் Oklahoma இனூடாக எடுத்துச் செல்லும் திட்டம் ஆகும். இத் திட்டத்தை நிறுத்தியதன் மூலம் தற்போது இந்த எண்ணெய் தரை மூலம் தொடர் வண்டிகளால் எடுத்துச் செல்லப்படப் போகிறது. இவ்வாறு தரைவழிப் பாதையில் பார வண்டிகள் செல்வதால் பெருமளவு காபன் வெளியிடப்படவுள்ளது. இதனால் நிகர- பூச்சிய காபன் வெளியேற்றத்தைக் (2023இல்) கொண்ட எண்ணைக் குழாய்த் திட்டத்தை இரத்து செய்தது சுற்றுப் புறச்சூழலைப் பாதுகாக்க எடுத்த நடவடிக்கையாகத் தெரியவில்லை என ஊடகவியலாளர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்க...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

இச்சந்திப்புகளிலும், எடுக்கப்பட்ட முடிவு களிலும் தென்படுகின்றது.

சர்வஜன வாக்கெடுப்பு இடம்பெறுவதை கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், சுமந்திரனும் விரும்பவில்லை என்று ஈபிஆர்எல்எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி தெரிவித்துள்ளார்.

பல சந்திப்புகளுக்குப் பிறகு ஒரு பொது வான அறிக்கை தயாரிப்பிற்கு எல்லோரும் ஒன்றுபட்டதாகவும், அறிக்கை வரைபில் இனப்படுகொலை என்ற ஒரு வார்த்தை யேனும் இடம்பெறவில்லை என்றும் அவர் கூறினார். கஜேந்திரகுமார் ஏற்றுக் கொள்வது அனைத்தையும் சுமந்திரன் ஏற்றுக்கொள்ளுகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


இதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார் பொன்னப்பலம் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஒரு அரசியல் விபச்சாரி என்று சாடியுள் ளார். தமிழ் மக்களின்- தமிழ் சிவில் அமைப்புக்களின் வலியுறுத்தல்களுக்கு இணங்கியே தமிழ் தேசியக் கட்சிகளின் சந்திப்புகள் இடம்பெற்று சில உடன்பாடு களும் எட்டப்பட்டுள்ளன. இவை முடிந்த கையோடு வெளியில் நின்று ஆளுக்காள் அடிபடும் நிலைமை அருவருப்பானதா கவே இருக்கின்றது.

கூட்டத்தொடரில் இலங்கை மீது ஒன்றுக்கு மேற்பட்ட தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதா இல்லை ஒரே தீர்மான மாக நிறைவேற்றுவதா என்பது தொடர் பாக உறுப்பு நாடுகளுடன் விரைவில் கலந்துரையாடவுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு தமிழர் தரப்பில் இருந்து பொது ஆவணம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பார்ப்போம்.. என்ன நடக்கின்றது என்று!

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டுமென்றால்
அடுத்து என்ன செய்யலாம் என்று
பார்க்கவேணும்.
அடுத்தவர்கள் என்ன செய்கின்றனர் என்று
பார்க்கக்கூடாது.




# முகக்கவசம் உயிர்க்கவசம் - நாடும் நடப்பும்- 30



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

கொரோனாவுக்கு எதிரான போரில் முகக்கவசம் அல்லது முகமறைப்பு அணிவது கட்டாயம். யுத்த காலத்தில் தேசிய அடையாள அட்டையைப்போல் தற்பொழுது முகக்கவசம் அவசியமாயிற்று. பொது இடங்களில், வெளியே செல்லும் போது பயன்படுத்துவது அவசியம். முகக் கவசம் அணிவது, குறைந்தது 02 மீற்றர் இடைவெளியைப் பராமரிப்பது அல்லது கைகழுவுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு மாற்றாக அமையாது. பெரியவர்கள்போல் 12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளும் முகக்கவசம் அணிய வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்தி உள்ளது. 05 அல்லது அதற்கு குறை வான வயதுள்ள குழந்தைகள் முகக் கவசம் அணியக்கூடாது என சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. 06---11 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளாக இருந்தால், அவர்கள் வாழும் அல்லது இருக்கும் பகுதியில் வைரசின் தாக்கத்தைப் பொறுத்து முகக்கவசம் அணிந்து கொள்ளலாம். இவர்கள் முகக் கவசம் அணிவதைமட்டும் பெரியவர்கள் கவனிக்காது அவற்றை நீக்கும் போதும் அதில் கவனம் செலுத்த வேண்டும். உடல் நலப் பிரச்சினைகள் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டோர் மருத்துவ ரீதியான முகக் கவசங்களை அணியவேண்டும். முகக்கவச விதிகளை மீறுவோருக்கு அபராதம், தண் டனை வழங்கப்படும்போதும் அதை மீறுவோரும் அதிகம் உள்ளனர். அத்துடன் முகக்கவசங்களை அகற்றும் முறைகளும் முக்கிய பிரச்சினையாக உள்ளது.

கொரோனா கிருமிப்பரவலை தடுப்பதற்காக முகக்கவசம் அணிவதற்கு வலியுறுத்தப் பட்டாலும் பலர் அதனை அலங்காரமாக வும் அணிந்துகொள்ளத் தொடங்கி யுள்ளனர். விதம் விதமான முகக்கவச உற்பத்திகள் வரத் தொடங்கியுள்ளன. மீண்டும், மீண்டும் பயன்படுத்தக்கூடிய முகக்கவசம், ஒரு நாளைக்கு மட்டும் பயன்படுத்தக்கூடிய முகக்கவசம் என வகையான முகக்கவசங்கள் உள்ளன. ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் முகக்கவசங்களின் விற்பனை அதிகரித் துள்ளது. 2020 மாசி 11 சீனாவில் கண்டறி யப்பட்ட வைரசுக்கு கோவிட் 19 என உலகசுகாதார அமைப்பால் அதிகாரபூர்வ மாகப் பெயரிடப்பட்ட பின் மார்ச் 22, 2020இல் யாழ்ப்பாணத்தில் முதலாவது கொரோனா நோயாளி கண்டுபிடிக்கப் பட்டார். அன்றுமுதல் முகக்கவச பாவனை பயன்படுத்துவதும், முறையற்ற வகையில் அகற்றுவதும் நிகழ்ந்தவண்ணம் உள்ளது. கொரோனாவைரஸ் தொற்றுப்பரவல் முழுமையாக முடிவடைய இரண்டு ஆண்டுகள் ஆகலாம் என உலக சுகாதாரத் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கூறியுள்ளார். அத்துடன் தடுப்பூசி பயன் படுத்தினாலும் இவ் சுகாதார முறையில் இருந்து விடுபட முடியாது. மேலும்



வேகமாகப் பரவும் புதிய வைரசான கோவிட் வைரசை அணியவேண்டும். இரண்டாம் வகைக்குள் அடங்கும் துணியி லான முகக்கவசம் காற்றை வடிக்கும் திறன் குறைந்தவை. அவை புதிய வைரசை தடுக்கக்கூடியவை அல்ல. இதை அறிந்த மக்கள் தாம் பாவித்த துணியிலான முகக்கவசத்தை கண்ட இங்களிலும் வீசமுனைவர். இவ்வாறு பார்த்தால் வீசும் சந்தர்ப்பங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது. எனவே முகக் கவசத்தை அணிவதில் காட்டும் அக்கறை போல் அகற்றுவதிலும் காட்ட வேண்டும். ஆனால் எதிர்பார்க்கும் அளவுக்கு அணிவதிலும், முறையாக அகற்றுவதிலும் மக்கள் அக்கறை காட்டுவதில்லை. ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் முகக்கவசங்கள் சுற்றுச் சூழலுக்கு அதிக அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு நாளும் இது தொடர்பான சுகாதார முறைகளை முறையாகப் பின்பற்றாத மக்கள் வழக்குகளுக்கு உட்படுத்தப்படுகின்றர்.

சுற்றுச்சூழல் பற்றிய அக்கறை மக்கள் மத்தியில் தாழ்ந்துவிட்டதாகக் கருதமுடி கிறது. இது சுற்றுலாப்பயணிகளை அச் சுறுத்துவதாக அமையக்கூடாது. நாளொன் றுக்கு 50 ஆயிரத்துக்கும் அதிகமான முகக்கவசங்கள் ஆறுகள், நீரோடைகள் மூலமாகக் கடலில் கலக்கின்றன. இதனால் கடலுக்குச் செல்வோருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. கடல்வாழ் உயிரி னங்களுக்கும், கடல்சார் சூழலுக்கும் பெரும் பாதிப்பை விளைவிக்கின்றது. இதில் கூடுதல் கவனம் செலுத்தாதவிடத்து சுற்றுலாப்பயணிகளின் வருகையையும் பாதிக்கக்கூடும். தினமும் ஐந்து இலட்சம் முகக்கவசங்கள் இலங்கையில் பயன் படுத்தப்படுகின்றன. அவற்றில் பெரும் பாலானவை சுகாதார முறைப்படி அப்புறப் படுத்தப்படுவதில்லை. கொழும்பு மாநகர சபையின்கீழ் வீதிகளைச் சுத்தம்செய்ய இரண்டாயிரத்துக்கும் அதிக பணியாளர் கள் ஈடுபடுகின்றனர். இவ்வாறான நிலை யில் பாதுகாப்பற்ற முறையில் அகற்றப் படும் முகக்கவசங்களால் அவர்களுக்கும் சுகாதார அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பயன்படுத்திய முகக்கவசங்களை பொது இடங்களில் அல்லது சாதாரண குப்பை களுடன் கலந்து அப்புறப்படுத்தக்கூடாது. அகற்றுவதற்கு வழக்கமான சுகாதார நடவடிக்கைகளைத் தவிர்த்து தனிநெறி முறை பின்பற்றத்தேவையில்லை. பின்பற்று வோர் உள்ளனர்.


பயன்படுத்தப்பட்ட முகக்கவசங்களை விஞ்ஞான முறைப்படி அழிக்கப்படாததால் பிரச்சினை மேலும் அதிகரிக்கும் அபாயம் எழுந்துள்ளது. பொது இடங்களில் இவற்றை வீசாது தனியாக சேகரித்து துப்பரவுத் தொழிலாளர்களின் ஆரோக்கி யம் பாதிக்கப்படாத வகையில் அவர்களி டம் ஒப்படைகப்படல் வேண்டும். முகக் கவசத்தை இரண்டு நாட்கள் வெயிலில் வைத்து, சுடுநீரில் நனைத்து பின்னர் ஒப்படைப்பதால் கிருமி பரவுவதைக் கட்டுப்படுத்தலாம். அத்துடன் பாதுகாப் பான முறையில் எரியூட்டலாம். எரியூட்டும் போதுவரும் வாயுவால் பாதிப்பு இல்லா வகையில் உயரமான புகைபோக்கி மூலம் வாயுவை வெளியேற்றுவது சிறந்த தாகும். வெட்டவெளியில் எரியூட்டுவதை தவிர்க்க வேண்டும். பாவித்த முகக்கவசங் களை எங்கே? எப்படி? அகற்றவேண்டும் எனத் தெரியாது தம் வசதிக்கு ஏற்றாற் போல் கழிவுகளுடன் அகற்றுவோரும் உளர். தொற்றுக் கழிவுகளை, தொற்று அல்லாத கழிவுகளுடன் கலக்கக்கூடாது. கலந்தால் இது எந்தக் கழிவு என அடை யாளமிட முடியாது. அத்துடன் ஒவ்வொரு இடத்திலும் இதனை சேகரிக்கக்கூடிய பாதுகாப்பான வசதிகள், வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு, காலம் தாழ்த்தாது அகற்று வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பான மேற்பார்வை மிகவும் அவசியம். மேற்பார்வைக்கான கீழ்ப்பார்வை குறைவாகவே உள்ளது.

சுற்றுச்சூழலை தனிமனிதன் இயற்கைச் சூழலுக்காகவும், மனிதனின் நன்மைக்காக வும் பாதுகாக்க வேண்டும். சூழல் மாசடைதல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனையாகும். சூழலுக்கு ஊறுவிளைவிக்காது சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தின்மீது கவனம் செலுத்த வேண்டும். மழை காலத்தில் வீசப்படும் முகக்கவசம் மழைநீர் தான்செல்லும் இடம் எல்லாம் முகக்கவசங்களையும் அழைத்துச் செல்லும். கண்ட இடங்களிலும் வீசிவிட்டு யாரும் பார்க்கவில்லை என மார்தட்டிக் கொள்வோரும் உளர். இதை ஒரு கெட்டித் தனமாகக் கருதக்கூடாது. அகற்றும் பொறி முறையில் கவனம் வேண்டும். சட்டம், தண்டனையால் மட்டும் இதைக் கட்டுப் படுத்த முடியாது. வேண்டுமானால் இது ஒரு தற்காலிக ஏற்பாடாக இருக்குமேதவிர ஒரு தொடர் செயற்பாடாக இருக்க முடியாது. வீசப்படும் முகக்கவசத்தால் தொற்று ஏற்பட வாய்ப்பு உண்டு என்ற அடிப்படை அறிவு இல்லாதோர்தான் கூடுதலாக வீசுகின்றனர். இங்கு விழிப்புணர்வுடன், பொறுப்புணர்வும் தேவை. இவற்றைச் சேகரித்தல், கொண்டு செல்லல், நீக்குதல் ஆகிய செயற்பாடு களில் உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்புக்கள் முக்கியமானதாகும். நகர்ப் புறம், கிராமப்புறம், குடியிருப்பு இடங்கள்



மற்றும் தொழிலகங்கள் போன்ற ஒவ்வொரு நிலைகளிலும் கவனம் ஈர்க்கப்பட வேண்டும். இதை அகற்றும் பணியாளர்களுக்கு, உடமைகளுக்கு பாதிப்போ, அச்சுறுத்தலோ, இடையூறோ ஏற்படுத்தாதிருப்பதை உரிய அமைப்பு உறுதி செய்துகொள்ள வேண்டும். இக் கழிவு அகற்றும் பணிகள் தடைப்படாத துமான ஒழுங்கான முகாமைத்துவம் இருக்க வேண்டும்.

பொதுவாக மரணமடைபவர்களை “சிவபதவி” அடைந்தார் எனவும் கூறுவர். இப்பதவி உச்சமான பதவி. சீக்கிரம் கிடைக்க வேண்டும் என்று விரும்பாத பதவி. இப்பதவியை முகக்கவசங்களை முறையற்றவகையில் கண்ட இடங்களிலும் வீசி இப்பதவியை அவசரப்பட்டு பெற்றுக் கொள்ள முயற்சிக்கக் கூடாது. இக்கவசம் அணிவதிலும், நீக்குவதிலும் காட்டப்படும் முக்கியத்துவத்தைப்பொறுத்தே முகக் கவசம் உயிர்கவசமாகக் கருதப்படும். நமக்கான உலகத்தை நாம்தான் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340 .9490 / 416.732.2228



Mr. S.F. Xavier (Teacher)

# செத்தும் ஆயிரம் பொன்-திரைவிமர்சனம்



ஆரணி. ஞா

இப்படம் இணையத்தளத்தில் 2019ஆம் ஆண்டு வெளிவந்தது. நகரத்தில் வாழும் மீரா தனது பாட்டியைத் தேடிக் கிராமத்துக்குச் செல்லும் காட்சியுடன் இப்படம் தொடங்குகிறது. வழி தெரியாத மீரா, அங்கு இருப்பவர்களிடம் வழியைக் கேட்கிறார். இக்காட்சி மூலம் நாம் மீரா நெடுங்காலமாக நகரத்தில் வாழ்வதாகவும் அவரது பாட்டியை அடையாளம் காண முடியாது என்றும் அறிகிறோம். இதற்கான காரணம் மீரா மற்றவர்கள் மீது ஏற்பட்ட கோபத்தால் எடுத்ததா, அல்லது கிராமத்தவர்கள் ஏதோ காரணத்தால் அவரை விலக்கினார்களா என்று போகப் போகத்தான் தெரியவருகிறது.

மீராவின் பாட்டி ஒரு ஒப்பாரிக் கலைஞர் எனப் படம் தொடங்கிய சிறிது நேரத்தில் தெரியவருகிறது. மொத்தமாக இப்படத்தில் நான்கு செத்தவீட்டுக் காட்சிகள் வருகின்றன. ஆனால் இக்காட்சிகள் கதையுடன் சேர்ந்து வருவதால் படமும் சோகப் படம் போல் அல்லாமல் நன்றாக நகர்கிறது. இப்படத்தில் மிகைப்படுத்தப் பட்ட காட்சிகள் மிகக் குறைவாகவே வருகின்றபடியால் பார்வையாளர்கள் ஓர் உண்மையான கிராமத்துக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். படக் கதையும் நன்றாகச் சென்று இறுதியில் மட்டும் அவசரப்பட்டு முடிகிறதுபோல் தெரிகிறது.

முதல் செத்த வீட்டில் நாம் பாட்டி உட்பட இப்படத்தின் பல கதாபாத்திரங்களைச் சந்திக்கின்றோம். இதற்குப் பிறகு நாம் மீரா, பாட்டி மற்றும் பலரின் உறவுகளைப்



பற்றியும் அறிகிறோம். ஏன் மீரா பாட்டி மீது கோபமாக இருக்கிறார் என்று இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படத்தில் நகர வாழ்க்கைக்குப் பழக்கப் பட்ட மீரா கிராமப்புறச் சூழலில் பழகுவது மிகவும் இயல்பாகக் காட்டப்படுகிறது.

மீரா, பாட்டி, இறந்தவர்களுக்கு ஒப்பனை செய்யும் குபேரன், பாட்டியிடமிருந்து ஒப்பாரிக் கலை படிக்கும் அமுதா ஆகியோர் இதில் முக்கிய கதாபாத்திரங்க ளாக அமைகின்றனர். இதில் மூவர், பிரதம கதாபாத்திரம் உட்பட, பெண்கள் என்பதால் இப்படத்தில் மற்றப் படங்களில் காணாத அளவிற்குப் பெண்களுக்கு இடையில் உரையாடல்களும் கதையில்



அவர்களின் முக்கியத்துவமும் காட்டப்படு கிறது. கதையில் நடக்கும் பிரச்சினைகள் ஒன்றும் பெண்களது தனிப்பட்ட பிரச்சினை என்று இல்லை. அதாவது பிற படங்களில் பெண்கள் பிரதம கதாபாத்திரம் என்றவுடன் கதை முழுவதும் அவருக்கு நடந்த வல்லுறவிற்குப் பழிவாங்குவதோ, கணவரிடம் அடி வாங்குவதோதான் காட்டப்படும். அவை எதுவும் இல்லாமல் சாதாரணமாகக் கதை நன்றாகச் செல்கிறது. அதாவது பெண் பிரதம கதாபாத்திரம் என்று விளம்பரம் செய்யும் படங்களைவிட இப்படம் பெண்களை யதார்த்தமாகக் காட்டுகிறது.

மீரா, பாட்டி, அமுதா ஆக நடித்த மூவரும் பிரபல்யமான கதாநாயகிகளாக இல்லாவிட்டாலும் இப்படத்தில் நன்றாக நடித்துள்ளனர். குறிப்பாக கதாநாயகியின் தோழி என்ற கதாபாத்திரமாக வரும் அமுதா அக்கதாபாத்திரத்தையும் தாண்டி சிறப்பாக நடித்துள்ளார்.

மீராவைத் தேவையில்லாமல் கதாநாயகர் களுக்குச் சமமாகக் காட்ட அடிக்கடி புகை பிடிக்க வைத்தது போல் தெரிகிறது. இருந்தாலும் புகைபிடித்தல் அவரின் பாட்டிக்கு இயற்கையாக இருந்தது.

தமிழரின் ஒப்பாரிக் கலையை முக்கியமாகவும், பெண்களைப் பிரதம கதாபாத்திரங்களாகவும் காட்டும் இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.

# ஆனந்தம் பற்றி ஒரு பரந்த பார்வை

**Words of Peace**

பிறேம் ராவத்
www.timelesstoday.com

நீங்கள் மிகப்பெரும் கவலையில் இருக்கிறீர் களென்றால், வளமாக வாழ்வதில் என்ன பலன்?

பலருக்கும் வளம் என்பது செல்வம் சார்ந்ததாக இருக்கிறது. ஆனால் அது உண்மையல்ல. வளமான வாழ்க்கை மூன்று விடயங்களில் தங்கியிருக்கிறது: செல்வம், ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சி. ஆக, இந்த மூன்று விடயங்களும் இருந்தால் தான் வளமான வாழ்வு சாத்தியமாகும். நான் ஒரு வைத்தியன் அல்ல. அதனால், உங்கள் ஆரோக்கியத்திற்கு நான் உதவமுடியாது. நான் பொருளாதாரம் கற்றவனும் அல்ல. அதனால், செல்வம் சார்ந்து உங்களுக்கு உதவ முடியாது. ஆனால் ஆனந்தம் என்ற விடயத்தில் என்னால் உதவமுடியும். ஏனென்றால், ஐம்பது வருடங்களாக நான் அதனை செய்து வருகிறேன்.

உங்கள் செழுமையான வாழ்வுக்கு மூன்று விடயங்கள் தேவை. ஆனந்தத்தோடு ஆரம் பிப்போம். நீங்கள் மிகப்பெரும் கவலையில், மனச்சோர்வில், இருக்கிறீர்களென்றால், வளமாக வாழ்வதில் என்ன பலன்? ஆனந்தம் எங்கிருந்து ஆரம்பிக்கிறது? உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் எப்பொழுதுமே ஆனந்தம் என்பது சூழ்நிலை சார்ந்த ஒன்று என்றே கருதி வருகிறீர்கள்.

"என் மனைவி சரியாக நடந்து கொள்வாளே யானால், என் நாய் நன்றாக நடந்துகொள்ளு மேயானால், என் பூனை நன்றாக நடந்து கொள்ளுமேயானால், என் மாடுகள் சரியாக நடந்துகொள்ளுமேயானால், என் அயலவர்கள் சரியாக நடப்பார்களேயானால்- அதிகாலை நான்கு மணிக்கு "யாக் யாக் யாக்" என்று இரைச்சலிடும் அயல்வீட்டுக்காரரின் கோழிக் குஞ்சுகள் இல்லாமல் போனால், அப்பொழுது நான் ஆனந்தமாக இருப்பேன். என் மகன் பாடசாலையில் இருந்து நல்ல மதிப்பெண் களை பெற்று வந்தான் என்றால், அப்பொழுது நான் மகிழ்ச்சி கொள்வேன்."

எனவே, உங்கள் ஆனந்தம் உங்கள் புறச் சூழலை சார்ந்திருக்கிறது. உங்கள் உலகம் ஒரு குறிப்பிட்ட விதத்தில் இருந்தால் நீங்கள் ஆனந்தமாக இருப்பீர்கள். உங்கள் வேலைத் தலத்தில், "என்னுடன் பணி புரிவோர் என்னைப் புரிந்துகொண்டால், என்னோடு இன்னமும் சரியான முறையில் நடந்து கொண்டால், எனக்கு மரியாதையை தருவார் களானால், நான் ஆனந்தமாக இருப்பேன்." என்று சொல்வீர்கள். நீங்கள் வேலையில் இருந்து ஓய்வுபெற்றபின் என்ன செய்யப்போகி றீர்கள்? உங்களோடு பணிபுரிந்தோர் உங்களோடு இருக்கமாட்டார்கள். அப்பொழுது என்ன செய்யப்போகிறீர்கள்?

உங்கள் வாழ்க்கை திருமணத்தோடு ஆரம் பித்து விவகாரத்தோடு முடியும் ஒன்றல்ல. நீங்கள் முதல் மூச்சை எடுத்தபோது உங்கள் வாழ்க்கை ஆரம்பித்தது. உங்கள் இறுதி மூச்சை நீங்கள் எடுக்கும்போது உங்கள் வாழ்க்கையும் முடிவடையும்.

உங்கள் வாழ்க்கை நீங்கள் செய்யும் விடயங்களில் இல்லை. உங்கள் வாழ்க்கை உங்கள் இருப்பைப் பற்றியது. இந்த மூச்சு உங்களுக்குள் வருகிறது. நீங்கள் அதனால் உயிரோடு இருக்கிறீர்கள். நீங்கள் செல்வந்தர் என்றாலும் இந்த மூச்சு உங்களுக்குள் வருகி றது. உங்களுக்கு உயிர் தருகிறது. நீங்கள் ஏழையாக இருந்தாலும் இந்த மூச்சு உங்களுக்குள் வருகிறது. உங்களுக்கு உயிர் தருகிறது.

மூச்சு உங்களுக்குள் வரவில்லை என்றால், நீங்கள் ஏழையும் அல்ல செல்வந்தரும் அல்ல. உங்களுக்கு உறவினர் இருக்க மாட்டார்கள். தானாகவே உங்களுக்கு விவாகரத்து கிடைத்துவிடும். தானாகவே கடனில் இருந்து மீண்டு விடுவீர்கள். உங்களுக்கு ஒரு billsஉம் இருக்காது. வருமான வரி கட்டத் தேவைப்படாது. தானாகவே உங்கள் வீட்டில் இருந்தும் காலியாகி விடுவீர்கள். நீங்கள் ஒரு வீட்டுக்கு சொந்தக்காரராக இருக்கமாட்டீர்கள்.

இது நகைச்சுவையான விடயமாகத் தெரிய லாம். நான் இதை நகைச்சுவையாகச் சொல்கிறேன். ஆனால், இது படுபாரதூர மான விடயம். நீங்கள் ஒரு தந்தை. ஒரு தாய். ஒரு மாமனார். ஒரு மைத்துனர். இது எல்லாமே இந்த மூச்சு நிகழ்ந்து கொண்டிருக்கும்வரை தான் சாத்தியம். இந்த மூச்சு நின்ற மறுகணமே நீங்கள் ஒன்றுமே இல்லை.

ஆனால், இதை நாங்கள் புரிந்துகொள்கி றோமா? இந்த ஓய்வற்ற விறுவிறுவென்ற நம் சிறு வாழ்வு, இதில் எல்லாமே பரபரவெனப் போகிறது. யாருக்கு நேரமிருக்கிறது? வளமான வாழ்வு - "அடடா..அது மூன்று விடயங்கள் சார்ந்ததல்லவா? அதற்கு ஆனந்தம், செல்வம், ஆரோக்கியம் என்ற மூன்றும் தேவையல்லவா? சற்றே நிறுத்தி, என்னுடைய மூச்சின் பெறுமதி என்ன? என்ற கேள்வியை எழுப்ப யாருக்கு நேரமிருக்கிறது?

பாருங்கள். ஒரு மனிதனாக, உங்களுக்குத் தேவைகள் இருக்கிறது. எனக்குத் தெரியும். உங்களுக்கு கனவுகளும் இருக்கிறது. தேவைகள் என பார்த்தால், மூன்று நிமிடங்களுக்கு நீங்கள் மூச்செடுக்கவில்லை என்றால், இறந்துவிடுவீர்கள். மூச்சு ஒரு தேவையா டாம்பீகமா? மூச்சு தேவையானதொன்றா? விருப்பமானதொன்றா?

இதனை நாங்கள் தெளிவுபடுத்திக் கொள்வோம். தேவை என்றால் என்ன? விருப்பம் என்றால் என்ன? மூன்று நிமிடங்களுக்கு மூச்செடுக்கவில்லை என்றால் இறந்துவிடுவீர்கள். ஆக, அது ஒரு விருப்பம் அல்ல. அது ஒரு தேவை. சாதாரணமாக மூன்று நிமிடங்களுக்கு தான் மூச்செடுக்காமல் தாக்குப்பிடிக்கலாம். சிலர் கொஞ்சம் கூடுதலான நேரத்திற்குச் சமாளிக்கலாம். சிலரால் மூன்று நிமிடங்களுக்குக் கூட மூச்செடுக்காமல் இருக்கமுடியாது. ஒட்டு மொத்தத்தில், இந்த மூச்சு இன்றி உங்களால் பிழைத்துக்கொள்ள முடியாது.

இப்பொழுது உங்கள் விருப்பத்தைப்பற்றிப் பார்ப்போம். High Definition படங்களுடன், தொலை இயக்கக் கருவியுடன் ஒரு தொலைக் காட்சி. இது தேவை என்பதற்குள் அடங்காது. "இந்த மனிதர் தொலைக்காட்சி இல்லாததால் இறந்துவிட்டார்" என ஒரு மருத்துவ பதமும் இல்லை. ஒருவர் மூச்சுத் திணறி இறந்து விட்டார். பட்டினியால் இறந்து விட்டார். உடல் நீர் இழப்பினால் இறந்து விட்டார் என்று மருத்துவ ரீதியாகச் சொல்கிறோம். தொலைக் காட்சி இல்லாமல் இறந்துவிட்டார் என்பதற்கு மருத்துவ ரீதியான பதம் ஒன்றும் இல்லை.
ஆனால் எதனை தொடர்ந்து போகிறீர்கள்? ஒவ்வொரு நாளும் எழுந்து உங்கள் கற்பனை யில், உங்கள் மனதில் எதை துரத்திச் செல்கிறீர்கள்? உங்கள் தேவைகளையா விருப்பங்களையா?


உங்கள் தேவைகளைப் பற்றி நீங்கள் கவனம் செலுத்துவதில்லை. உங்கள் விருப்பங்கள் பற்றிக் கவனம் செலுத்துகிறீர்கள். ஏனென்றால், "மூச்செடு" என்று சொல்லும் ஒரு விளம்பரப் பலகையை நீங்கள் ஒருபோதும் காண மாட்டீர்கள். மாறாக, "இந்தப் பானத்தை

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)

# ஆழியவளை

தொடர் கட்டுரை

## யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்



கந்தசாமி முத்துராஜா

### ஆ. நொடி

"மரபுவகை நாட்டார் வழக்காறுகளுள் நிலைத்த தொடர் அமைப்புடையது விடுகதை. அதன் சொற்செறிவும் சுருங்கிய வடிவும் மக்களின் மனங்களை எளிதில் ஈர்க்கின்றது. விடுகதை என்பது ஒரு சொல் விளையாட்டு ஆகும். ஒரு சொல்லில் விடுகதைக்கு விடை அளித்தல் என்பது பொருள். விடுகதைக்குப் பிசி, பிதிர், புதிர், வெடி, அளிப்பாங்கதை எனப் பலசொற்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பயன்படுத்தப்படுகின்றன" (தே. லூர்து 1988: 49).

இலங்கைத் தமிழரிடையே பெரும்பாலும் இதை 'நொடி' என்று கூறுவர். உடல் நோகாமல் கையால் செய்கின்ற இலேசான வேலையின்போது பெரும்பாலும் நொடிப் பரிமாற்றம் நடைபெறும். கரைவலைத் தொழிலாளர் நெத்தலி (நெய்த்தோலி), கீரைமங்கு, சாளைமங்கு, லாகன் முதலிய கருவாட்டுக் குவியல்களை, வட்டமாகச் சுற்றியிருந்து 'கருவாடு தெரியும்' போதும், கோயில்களிலும் பூசையம்மன்களிலும் மோதகம் பிடிக்கும்போதும், கிழிந்த வலைகளைப் பொத்தும்போதும், புதியவலை முடிக்கும்போதும் ஆண்கள் நொடிப்போட்டி நடத்துவர்.

பெண்கள் பனங்கிழங்குத் தோலை உரிக்கும்போதும், பனம் பழத்தைப் பிசைந்து பனங்கழியை எடுக்கும்போதும், பனங்கிழங்குக் குவியலை ஒடியலுக்காகக் கிழிக்கும்போதும், வரிசையாகக் குந்தியிருந்து கருவாடு கூட்டும்போதும், விறகு, பனங்கொட்டை முதலியவற்றைச் சேகரிப்பதற்குக் காடுநோக்கி வரிசையாக நடந்து செல்லும்போதும், கிடுகு பின்னும்போதும், களை பிடுங்கும்போதும் இப்படியான நொடிகூறி விடைசொல்லிக் குதூகலிப்பர்.



இதன்மூலம் தொழில்மீதுள்ள அலுப்பு, பஞ்சி, சோம்பல், கண்ணயர்வு போன்றவற்றை அகற்றி விடுகின்றனர். நேரம் போவது தெரியாமல் தொழிலை முடித்து விடுகின்றனர். அத்தோடு அறிவையும் பெறுகின்றனர். ஒரே நேரத்தில் 'அளிப்பும் எடுப்பும்' நடைபெறுகின்றது.

இவ்வூரில் வழங்கும், பின்வரும் சில நொடிகளினூடு அச்சமூகத்தின் தகவல்கள் சிலவற்றைத் தெரிந்து கொள்ளலாம்:
காட்டுக்குள் கறுப்பியும், சிவப்பியும் கண்ணைக் கண்ணைக் காட்டுகின்றனர்.
விடை: அ. ஈச்சங்காயும் பழமும்
ஆ. நாவல்காயும் பழமும்

தொம் எண்டான் தொப்பி கழண்டாள்
விடை: பனம் பழம்

உச்சாரம் கொப்பில் உலக்கை தூங்குவது. விடை: முருங்கைக்காய்

பூக்கும் காய்க்கும் கலகலக்கும் காகம் இருக்கக் கொப்பில்லை.
விடை: நெற்கதிர். (மட்டக்களப்பில் இதற்கு விடை: கிலுகிலுப்பை).

### இ. கரைவலை அம்பா

அம்பா என்பது மீன்பிடியில் ஈடுபட்டுள்ளோர் ஒருங்கு சேர்ந்து உடற்சிரமமான ஒரு மீன்பிடிச் செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது வேலைப் பழுவை மறப்பதற்கும் தொடர்ந்து உற்சாகமாகத் தொழிற்படுவதற்குப் பாடும் பாடலாகும். அம்பா என்ற சொல்லின் இந்நிலைப்பட்ட பொருள் யாது என்பது தெரியவில்லை. இருப்பினும் கடலை அன்னையாகப் பாவித்துப் பாடும் பாடல் முறையின் எச்சமாக இருக்கலாம்.

இன்றைய நிலையில் ஆழியவளையில் கரைவலைத் தொழிலின்போது இடம் பெறும் பல்வேறு வேலைப்பழுக் கட்டங்களில் அம்பா பாடப்படும். இங்குள்ள பாடல் முறைவழியின்படி அந்தச் சிரமத் தொழிலில் ஈடுபடும் பல தொழிலாளர்களுள் ஏதோ ஒரு வகையில் முக்கியம் பெறும் ஒரு கருமத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவர் முதல் அடியைப்பாட அதே குழுமத்திலுள்ள இன்னொருவர் அதன் தொடர் அடியைப் பாடுவார். ஒவ்வொரு அடியைப் பாடும்பொழுதும் ஏறத்தாழச் சீர்சீராக இரு பிரிவுகளாக வரும். அந்தச் சீரிடையில் ஏறத்தாழச் சீர்சீராக ஒத்திசையாக எல்லோரும் 'ஏலையா' சொல்லுவர் எடுத்துக்காட்டாக:
ஆளில்லா என் வலைக்கு - ஏலையா
ஆராரோ மண்டாடி - ஏலையா என்பதைக் கூறலாம்.

வேலைத்துரிதம் கூடக்கூட பாட்டின் வேகமும் கூடும். மிகச் சிரமமான காரியம் செய்யப்படும் பொழுதோ அல்லது தொகையாக மீன்பட்ட இடத்தோ வலை இழுவையின் வேகம் அதிகரிக்க அதிகரிக்கத் தூஷணை வார்த்தைகளின் பயன்பாடு அம்பாவில் அதிகரிப்பதைக் காணலாம்.

தொடரும்...)

## தயக்கம்



நல்லது செய்ய, வேண்டாம் தயக்கம்
அல்லது செய்ய, வேண்டும் தயக்கம்
முயற்சி செய்யக் கொள்ளும் தயக்கம்
முன்னேற்றத்தை முழுதும் கெடுக்கும்
உண்மை சொல்லக் காட்டும் தயக்கம்
உள்மனம் என்றும் உன்னை அரிக்கும்
உதவி செய்யக் காட்டும் தயக்கம்
உறவுகள் அகல வழியை வகுக்கும்
ஐயம் கேட்க கொள்ளும் தயக்கம்
அறிவு வளரத் தடையாய் இருக்கும்.

சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்



Math tutorial 425

Answers to tutorial 424

1)s(t) =-t²+8t :t=0, t=4, t=6

V(t) =s't =-2t +8

Therefore the velocities at t=o ,4 and 6 are 8 ,0 ,and -4

2)y=x² , dy/dx =2x , hence the slope of the tangent at A (2 ,4 ) is 4 and at B(-1/8 , 1/64 ) IS -1/4

SINCE THE PRODUCT OF THE SLOPES IS -1 ,THE TANGENTS ARE PERPENDICULAR

3)c(x) =1/3x³ +40x +700

a)c'(x)x² +40

b) c'(x) =76

x² +40 =76 , x² =36

x = 6 , production level is 6 gloves/week

4)ū.v̄ = (5 ,6 ,-3 ).(1 ,4 ,5 ) =14

|v̄|² =1² +4² +5² =42

Therefore the Projection of

(ūonto v̄ ) =(ū . v̄ )v̄ divided by

|v̄ |²

=14(1.4.5)/42 = (1/3 ,4/3 ,5/3 )

Tutorial 425

Questions

1)A tangent to the parabola y = 3x² -7x +5 is perpendicular to x² +5y -10 =0 .Determine the equation of the tangent

2) A train leaves the station at 10:00 and travels due south at a speed of 60km/h .Another train has been heading due west at 45km/h and reaches the same station at 11 :00 . At what time were the two trains closest together?

3)If the digits 0 ,1 ,2 ..........9 are formed into a sequence of length 6 with each digit used at most once , how many of the sequences start with 0 or end with 9

ByMr.S.F.Xavier(Teacher)6473409490/4167322228

# அனைத்துமே உனக்கு!



அன்புடன் இரு
ஆணவம் அகற்று
இன்முகம் காட்டு
ஈகை வளர்
உண்மையை உரை
ஊக்கத்தை நாடு
எரிக்கும் கோபத்தை
ஏற்காது இரு
ஐக்கியமாகு சத்தியவழியில்
ஒன்றிய மனத்துடன்
ஓதிநீ அறிந்திடு
ஔடதம் ஆகும்
அனைத்துமே உனக்கு!

கள்ளமனத்தினை காணாமல்செய்திடு
கிள்ளியெறிந்திடு கீழவர்தொடர்பினை
குறைகள்சொல்வதை கூறுகள்போட்டிடு
கெட்டவர்நட்பு கேடெனவுணர்ந்திடு
கைகளால் அன்பொடு கைகளைப்பற்றிடு
கொலைவெறி ஊட்டிடும் கோபத்தைவிட்டிடு
கௌரவமுந்தன் ஔடதமாகுமே!

சன்மார்க்கம் நின்றால் சாந்தியைப் பெறலாம்
சிறுமதி கொண்டால் சீரெலாம் மறையும்
சுகம்பெற வேண்டில் சூழலை மாற்று
செகமதில் உன்னைச் சேவிப்பர் நாளும்
சைகள் மூலம் சகலதும் உணர்த்தலாம்
சொல்லும் சொல்லை சோர்விலா சொல்லு
சௌக்கியம் ஆகும் சகலதும் உனக்கு!

தர்மம் செய்வதை தாமதம் ஆக்காதே
திருட்டு என்பதை தீண்டாமல் இருந்திடு
துன்மார்க்க குணத்தைத் தூரவே விரட்டு
தென்படும் உனக்கு தேவையாம் தெளிவு
தைக்கும் வார்த்தையை தவிர்த்தே நில்லு
தொட்டிடும் யாவும் தோன்றிடும் நன்றாய்!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

# ஆனந்தம்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

அருந்துங்கள். இந்தத் தொலைக்காட்சியை வாங்குங்கள். இந்த ஆடையை வாங்குங்கள். இதை வாங்குங்கள், அதை வாங்குங்கள் என்ற தகவல்கள் வந்தவண்ணமே இருக்கும். நீங்களும், ஆமாம், அது இருந்தால் நன்றாக இருக்கும். இது இருந்தால் நன்றாக இருக்கும் என்பீர்கள்.

உங்களுக்கு விருப்பங்கள் இருக்கக்கூடாது என்று சொல்கிறேனா? இந்த விடயத்தில் நான் மாறுபட்டவன். உங்களுக்கு விருப்பங்கள் இருக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. எவ்வளவுக்கு விருப்பங்கள் இருந்தாலும் ஒரு பிரச்சனையும் இல்லை. ஆனால், உங்கள் தேவையை புரிந்துகொள்ளுங்கள்.

இது "பரந்த பார்வை". நீங்கள் வாகனம் ஓட்டும்போது உங்கள் வேகமானியைப் பார்க்க வேண்டுமா? ஆம்? வேகமானியை மட்டுமே பார்க்கவேண்டுமா? வாகனத்தை செலுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியே சென்றால் விபத்துக்குள்ளாகி விடுவீர்கள். நீங்கள் சன்னலுக்கூடாகப் பார்க்கவேண்டும். வீதியை பார்க்கவேண்டும். உங்கள் பின்னால் பார்க்க வேண்டும். அட்டாவதானியாக இருக்கவேண்டும்.

இது வாழ்க்கை! வாழ்க்கையின் பெறுமதியை புரிந்துகொள்ளுங்கள். உங்கள் தேவையை புரிந்துகொள்வீர்கள். உங்கள் தேவையை பூர்த்தி செய்யுங்கள். உங்களுக்கு ஆனந்தம் கிடைக்கும்.

# இயற்கை மனித இனத்தை அழித்திடுமா?

## மனித இனத்தால் ஏற்பட்ட கெடுதல்கள்

விளைநிலத்தை அழித்துமாடி வீடுவீடாய் கட்டிவந்தோம்!
விண்ணளாவி நின்றமரச் சோலைகலை அழித்திட்டோம்
மழை பொழியா நிலைகொணர்ந்து வரட்சியெங்கும் வரச்செய்தோம்
மதவெறியால் இனவெறியால் மக்களுயிர் குடித்திட்டோம்!

கழிவுநீரைக் குளத்துநீரில் கலக்கவிட்டுக் குடிநீரைக்
காவிவர ஏழைகளைக் காததூரம் நடக்கவைத்தோம்
பழிபாவம் கருதிடாது பாவயரை உருக்குலைத்தோம்
பரிசுத்தமான காற்றை மாசடையச் செய்திட்டோம்!

சிற்றின்பமே பிறவிப் பேறென்று உளமகிழ்ந்து
தேவையற்ற காமவிச்சை தினம்வளர்க்கும் பேய்களுமாய்க்
கற்றநெறி கைவிட்டுக் கயவர்களாய் கொலைகுற்றம்
கைக்குவந்த கலையாக்கி வினைமூட்டை தூக்கிநின்றோம்!

இயற்கைதந்த விலங்குகளை இரக்கமின்றி கொன்றிட்டோம்!
ஏற்றசைவ உணவிருக்க உயிர்பறித்துப் பிணம் தின்றோம்!
செயற்கையணுக் குண்டுபோட்டுப் பேரழிவு செய்துவிட்டோம்
தீவிரவா தியாகிப்பல உயிர்களையும் பலியெடுத்தோம்!

மெலிந்துநாளும் பாலிலாது துடித்துமாளும் குழந்தைகளை
நலிந்தெலும்பும் தோலுமாகித் தினமிறக்கும் பிள்ளைகளைப்
பலிகொடுக்கப் பார்த்தபாவம் பாரிலேதி ரண்டுவந்து
வலிமைமிக்க வைறஸான கொறோனோவாகிக் கொன்றதோ?
வல்லரசு நாடுகளின் படைப்பலமும் போட்டியிட
வரலாறு காணாத பெரும்போரும் வெடித்திடுமோ?
எல்லைகளைக் காப்பதற்கு எத்தனையோ படையடுக்கு
என்றுமில்லாப் பதட்டநிலை இயற்கையின் பேரழிவிற்கோ?

மனிதகுலம் அழிவிலாது வாழ்வதற்(கு) றுதியேது?
வளம்பெருக்க வாழ்வளித்த இயற்கையன்னை எழிலெல்லாம்
புனிதமாக அன்றுபோல என்றுமிங்கு இல்லையே
பொறுமைவிட்டு இயற்கையன்னை பொங்கி விட்டால் அழிவன்றோ?



பல்வைத்திய கலாநிதி
இளமுருகனார் பாரதி















# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

# 416.298.2777

# $375 Mo.

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5